கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

29

844
3-56

11 AUG 1956
MADRAS

செய்திகள்

கட்சில் கடும் பூகம்பம்

கட்சு என்ற தீபகற்பம், கூர்ஜரப் பிரதேசத்தில் உள்ள ராஜ்யம் அங்கேதான் ஒரு பூகம்ப அதிர்ச்சி சமீபத்தில் உண்டாயிற்று. நில நடுக்கம் ஏழு விநாடி வரையில் இருந்திருக்கிறது. இந்த அதிர்ச்சி பம்பாய் நகரம் வரையில் இருந்திருக்கிறது. கட்சின் தலைநகரான புஜ் என்ற நகரிலும் அதற்கு அருகில் உள்ள அஞ்சார் என்ற நகரிலும் பல வீடுகள் இடிந்து, சுவர்கள் பிளந்து, இடிபாடுகள் ஏற்பட்டுவிட்டன. பலர் உயிரிழந்துவிட்டார்கள். பலருக்கு பலத்த காயம். ஆனால் நாலுமாதக் குழந்தை ஒன்று மட்டும் இடிந்து விழுந்த ஒரு வீட்டில் அப்படியே பத்திரமாகத் தொட்டிலில் விளையாடிக்கொண் டிருந்ததாம்.

பர்மாவில் ஒரு புது எரிமலை

பர்மா தேசத்தில் மாண்டலே என்ற முக்கியமான நகரம் ஒன்று இருக்கிறது. அங்கிருந்து பதினைந்து மைல் தூரத்தில் மலை ஒன்று இருக்கிறது. அது திடீரென்று வெடித்து, கந்தக நெடிப்புகை விடத் தொடங்கியது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் பூகம்பத்தாலும் 40 கட்டடங்கள் தரைமட்டமாகிவிட்டன.

பாலர்களுக்குப் பகல் உணவு இலவசம்

திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையாபுரம் பகுதியில் 30 இடங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஏழைச் சிறுவர் சிறுமியர்களுக்கு மாலையில் இலவச உணவு வழங்கத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தந்த ஊரில், கிராமவாசிகளே உணவு தானியங்களைச் சேகரித்து வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை முதல் மந்திரி காமராஜும், கல்வி இலாகா டைரெக்டர் சுந்தரவடிவேலுவும் பல இடங்களில் துவக்கி வைத்தார்கள்.

பனி மனிதன்

இமயமலையில் பனி மனிதன் இருப்பதாகப் பலர் கருதுகிறார்கள். அடிக்கடி பல இடங்களில் ஓர் அடி முதல் ஒன்றரையடி வரையில் அகலமுள்ள காலடிகளைக் கொண்டே இவ்வாறு பிரம்மாண்டமான பனி மனிதன் இருக்கவேண்டும் என்று சொல்லிவருகிறார்கள். இதேபோல், தென் அமெரிக்காவில் அர்ஜண்டினா என்ற தேசத்திலுள்ள ஆண்டிஸ் மலையிலும் பனி மனிதன் இருப்பதாகத் தெரிகிறதாம். பல இடங்களில் 16 அங்குல அகலமுள்ள காலடிச் சுவடுகள் தெரிவதைப் பல விஞ்ஞானிகள் பார்த்து விட்டு, இவ்வாறு எண்ணுகிறார்கள்.

நிதி மந்திரி தேஷ்முக் ராஜீநாமா

பாரதத்தின் முக்கியமான மந்திரிகளில் நிதி மந்திரியும் ஒருவர். இந்த நிதி மந்திரிப் பதவியை ஆறுவருஷகாலமாக ஸ்ரீ தேஷ்முக் வகித்து வந்தார். அவர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர். பம்பாய் நகரை மகாராஷ்டிர ராஜ்யத்திலிருந்து பிரித்துவிட்டதை ஆட்சேபித்து இவர் தம் பதவியை ராஜீநாமா செய்துவிட்டார். மிகத் திறமையாகப் பதவி வகித்து வந்த தேஷ்முக் இந்தியாவின் செல்வ நிலையை ஸ்திரமாக உயர்த்தினார். அவர் ஆங்கில ஆட்சியின்போது ரிஸர்வ் பாங்க் கவர்னராக இருந்திருக்கிறார்.

மகாபுலிபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம்

சென்னைக்குச் சமீபமாக உள்ள கடற்கரைக் கிராமம் மகாபலிபுரம். இது ஒரு காலத்தில் பல்லவர்களின் கடற்கரைப் பட்டினமாக இருந்தது. சிற்பக் கலைக்குப் பிரசித்தி பெற்ற இடம். அங்கே ஒரு சிற்பப் பயிற்சிச் சாலையை ஏற்படுத்தி, உபகாரச் சம்பளம் கொடுத்து, வருஷத்துக்கு இருபது மாணவர்களுக்குச் சிற்பக் கலையைக் கற்றுத் தரப்போகிறார்களாம்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 15

1-8-'56

குழந்தைகளே!	பக்கம்	2
மூன்று பொருள்கள்	..	3
என்ன பிரமாதம்!	..	4
சைனா சு - சூ!	..	5
பாலர் கவியரங்கம்	..	11
விஞ்ஞானம் பேசுகிறார்	..	12
நாலும் தெரிந்தவன்	..	15
புதுப் பையன்	..	18
அவன் அம்மா	..	22
நீரில் வாழும் குதிரை	..	26
உனக்குத் தெரியுமா?	..	28
நல்ல பாடம்	..	29
சந்நியாசி	..	33
புலிக்குட்டி	..	37
பால கங்காதர திலகர்	..	40

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ணா
செய்திகள் - 2 - அட்டை.
பேனா நண்பர்கள் - 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

புத்தர் கதை

புத்தர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு ஞானோபதேசம் செய்து வந்தார். பசிக்கும்போது யார் எதைத் தருகிறார்களோ அதை உண்பார்.

ஒரு சமயம் காசிபாரத்வாஜன் என்ற பிராம்மணன் ஒருவன் ஏழைகளுக்கு அன்னமளித்துக்கொண்டிருந்தான். புத்தரும் அங்கே சென்று கையை நீட்டினார்.

பாரத்வாஜன் பார்த்தான். அன்னமிட்டுவந்த கையை இழுத்துக்கொண்டு, ''துறவியே, இது நான் பாடுபட்டு உழைத்துப் பயிரிட்டுப் பெற்ற தானியம். பல நாட்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்த பிறகு இந்தத் தானியம் எனக்கு உணவாகிறது. அதை நானும் உண்டு, பிறருக்கும் வழங்குகிறேன். ஆனால் நீயோ ஒரு பாடும் படாமலே சாப்பிட விரும்புகிறாயே. இது சரியா?'' என்று கேட்டான்.

''நானும் உழுது விதைத்துத்தான் சாப்பிடுகிறேன்'' என்றார் புத்தர் சாந்தமாக.

''கையில் திருவோடுதானே இருக்கிறது! இதைக் கொண்டு நீ எதை உழுது பயிரிடுகிறாய்?''

''அப்பா! நீ நிலத்தை உழுகிறாய்! அதிலிருந்து உணவு கிடைக்கிறது ஆனால் நான் சத்தியம், புத்தி என்ற கலப்பைகளைக் கொண்டு உன் போன்றவர்களுடைய உள்ளத்தை உழுதுகொண்டிருக்கிறேன். நீ தரும் உணவு வயிற்றுப் பசியைப் போக்கும். ஆனால் நான் உழுது கிடைக்கும் உணவோ அந்தப் பசிக்குக் காரணமான பிணியையே நீக்கும்'' என்றார் கௌதமர்.

காசி பாரத்வாஜனுக்கு உண்மை விளங்கியது. அவன் புத்தருக்கு அன்னமிட்டு அவரிடமே ஞானோபதேசமும் பெற்றான்.

—பிரசாத்

குழந்தைகளே!

கண்ணன் தொடர்கதைப் போட்டிக்குக் கதைகள் வர ஆரம்பித்து விட்டன. இன்னும் எழுதிக்கொண் டிருப்பவர்களும் வேகமாக எழுதி முடித்து, குறித்த தேதிக்குள் அனுப்பிவைத்துவிடக் கோருகிறேன். பரிசு கிடைக்குமா, கிடைக்காதா, எங்கே கிடைக்கப் போகிறது என்ற எண்ணத்தோடு எதையும் எழுதாதீர்கள். தைரியத்தோடும் ஊக்கத்தோடும் எழுதுங்கள். பரிசு பெறுவது என்பது யாருடைய கையிலும் இல்லை. எழுதுகிற போக்கு அமைவதைப் பொறுத்திருக்கிறது. சில சமயம் நாம் பரிசு பெறாது என்றே எழுதுவோம். அதுவே முதல் பரிசு பெறக் கூடிய விதத்தில் அமைந்துவிடும். முதல் பரிசு இதற்குத்தான் என்று தொடங்குவோம். தபாலில் அதுதான் முதலில் திரும்பி வரும். ஆகவே அதையெல்லாம் எண்ணாமல் எழுதுங்கள். எப்படியிருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தை ஒட்டி ஒரு முழுக் கதை உருவாகிவிடுகிறது. அதுவே உங்களுக்கு ஒரு லாபந்தானே! இல்லாவிட்டால் எங்கே மெனக்கெட்டு எழுதப்போகிறீர்கள்?

கண்ணனிடம் அக்கறை கொண்ட குழந்தைகள் ஒரு காரியம் செய்ய வேண்டும். உங்கள் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் நீங்கள் கலந்து கொள்ளலாம். உங்களுக்கு எந்த மாதிரிப் பகுதிகள், விஷயங்கள் தேவையோ இன்னும் எதையெல்லாம் சேர்க்கவேண்டுமோ அவற்றை விவரமாக, வரிசையாக எண் இலக்கமிட்டு எழுதியனுப்பவேண்டும். உங்களுக்குப் பிடித்த விஷயங்களை நீங்களே தெரிவிக்கலாம். அவ்வளவையும் கண்ணனில் வெளியிட முயலுகிறேன். சிறந்த யோசனைகள் கூறும் குழந்தைகளுடைய கடிதங்களைப் பிறரும் தெரிந்து கொள்வதற்காகப் பிரசுரம் செய்கிறேன். அதற்குச் சம்மானமும் அனுப்பப்படும். ஒரு வீட்டில் கண்ணனை நாலு பேர் படிக்கிறார்கள் என்றால் நாலு பேரும் தனித் தனியே எழுதியனுப்பலாம். உங்கள் யோசனைகள் கிடைத்த சில நாட்களிலேயே அவற்றைச் செயலாக்க வசதியாக இருக்கும். அநேகமாக கண்ணன் படிக்கும் எல்லாக் குழந்தைகளுமே தங்கள் யோசனைகளைத் தெரிவிக்க முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

புதிய தொடர்கதைகள் இரண்டும் இப்பொழுது விறுவிறுப்போடு செல்கின்றன. விரைவில் மற்றொரு தொடர்கதை ஆரம்பமாகும்.

கண்ணன் வெளியீடுகளான அபாயச்சங்கு, பாரஸீக ரோஜா ஆகிய இரண்டு புத்தகங்களும் தேவையென்று கிட்டத்தட்ட இருநூறு குழந்தைகள் மணியார்டரும் ஸ்டாம்புகளும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் புத்தகம் போகவில்லை. காரணம் முதலில் தயாரான பிரதிகள் செலவாகிவிட்டதுதான். அவற்றைத் தயாரித்து அனுப்புவதில் சிறிதும் தாமதம் ஏற்பட்டுவிட்டது. இதற்காக நான் வருந்துகிறேன். ஸ்டாம்பு அனுப்பியும் புத்தகம் வரவில்லையே என்று சில பேருக்கு யோசனையாகக்கூடப் போயிருக்கும். யாரும் இதைத் தப்பாக எண்ண வேண்டாம். இப்பொழுது புத்தகங்கள் தயாராகிவிட்டதால் எல்லாருக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. லீடர் மணி புத்தகம்கூடத் தயாராகிவிட்டது. பெரிய அளவில் 182 பக்கங்கள். நல்ல காகிதத்தில் படங்களோடு வெளிவந்திருக்கிறது. இதற்கு விலை மிகவும் குறைவாகவே வைத்திருக்கிறோம். புத்தகத்தைப் பார்த்தாலே, "ஒன்றரை ரூபாய் தானா இது?" என்று அத்தனை மலிவாகத் தோன்றும். ஆகவே இனிப் புத்தகங்கள் வேண்டுபவர்கள் அதற்கும் சேர்த்து எழுதலாம்.

கண்ணன் வெளியீடுகள் எல்லாம் ஒன்று மாற்றி ஒன்று கைவசமில்லாமல் செலவழிந்து கொண்டேயிருக்கின்றன. அதனால் இரண்டொரு சந்தர்ப்பத்தில் ஒரு வாரம் போல் தாமதமும் ஆகிவிடுகிறது. இனி, உங்களைக் காக்கவைக்காமல் அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஆசிரியர்

மூன்று பொருள்கள்

பூவண்ணன்



கோடை என்னும் கொடியவன்
ஓடி யிங்கு வந்தனன்;
வாடச் செய்யும் அவனையே
ஓட ஓட விரட்டுவோம்.

துன்பம் கொடுக்கும் கோடையைத்
தொலைக்க மூன்று பொருள்களே
என்றும் நமக்குத் தேவையே!
எந்த மூன்று தெரியுமா?

காலை வைத்தால் சுட்டிடும்
கடுமை யான வெய்யிலைத்
தோலைக் கொண்டு தைத்திடும்
செருப்பு கொண்டு தடுக்கலாம்.

உடலை வாட்டும் வெய்யிலை
ஒழித்து நிழலைக் கொடுத்திடும்
குடையும் கொடிய கோடையைக்
கொன்று போடும் வீரனும்.

வியர்க்கச் செய்யும் வெய்யிலின்
வெப்பம் தன்னைக் குறைத்திட
நயமாய் வாங்க முடிந்திடும்
நல்ல விசிறி தேவையே!

இதென்ன, பிரமாதம்?

உன் மூளை ஒரு காரியத்தைச் செய்யச் சொல்லி உத்தரவு போட்டால் உன் விரல்கள் அதன்படி நடக்குமா? எங்கே, உனக்கே சந்தேகமாக இருந்தால், இதைச் செய்து பார்த்து விட்டுச்சொல், பார்க்கலாம்!

உன் மேஜைமீது இந்தப் பத்திரிகையிலுள்ள இந்தப் பக்கத்தைத் திறந்து கண்ணுடியின் (நிலைக்கண்ணுடி) முன்னுல் வைத்துக்கொள். கண்ணுடியில் தெரியும் பிரதிபிம்பத்தைக் கொண்டு இந்தப் பக்கத்திலுள்ள நட்சத்திரத்தின் மீது சரியாக எல்லைக் கோடு வரையவேண்டும். நீ நேராகப் பத்திரிகையைப் பார்க்காமலிருக்க இடையே புத்தகங்களை அடுக்கிவிடு.

படிக்கும்போது, 'இதென்ன பிரமாதம்!' என்றுதான் தோன்றும். ஆனுல் செய்தால்தான் தெரியும் திண்டாட்டம்!

அந்தக் கிழவர் கீழே விழுந்ததைக் கண்ட சீனனுக்கு ஒன்றும் புரியவில்லை. மின்சாரம் தாக்கியதுபோல அவர் தலைகுப்புற விழுந்துவிட்டார்.

அவனுக்கு நிதானம் உண்டாகச் சிறிது நேரம் பிடித்தது. பிறகு மேஜைமீது கிடந்த சிறு டவலை எடுத்து, எதிரே தெரிந்த பீங்கான் பொருத்திய குழாயில் நனைத்துக் கொண்டு வந்தான். மயக்கமடைந்தவர்கள் முகத்தில் சுத்தமான தண்ணீரைத் தெளித்தால் நல்லது என்று அவனுக்குத் தெரியும். அதனால் அந்தத் துணியினால் அவர் முகத்தை மெல்லத் துடைத்தான். அந்த அறையில் குளிர்ச்சி தரும் சாதனம் பொருத்தப்பட்டிருந்தது அவனுக்குத் தெரியாது. அது இப்போது வேலை செய்யவில்லை. மேலே விசிறி ஒன்று இருந்ததைப் பார்த்தான். போய் அதனுடைய விசையைத் திருகியதும் குளிர்ந்த காற்றாக வீசியது.

பீரோ திறந்திருப்பது அவனுக்கு அச்சமாக இருந்தது. மண்டை ஓட்டைக் கண்டு அவன் பயப்படவில்லை. அதைப் போல் தெருவில் வித்தை காட்டுபவர்கள் வைத்திருப்பதை அவன் அடிக்கடி பார்த்திருக்கிறான். மண்டை ஓடு வைத்துக்கொண்டிருக்கக்கூடிய மனிதரிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டு விட்டோமே என்றும் அவன் பயப்படவில்லை. ஆனால் விலையுயர்ந்த பொருள்களும் ஆபரணங்களும் பணமும் குவிந்து கிடக்கும் அந்தப் பீரோ மண்டை ஓட்டைவிட அவனை அச்சப்படுத்தியது. அதனால் எழுந்து அதன் கதவை மூடினான்.

முகத்தில் குளிர்ந்த காற்றும் தண்ணீரும் பட்டதும் கிழவருக்குக் களைப்பு ஒரு மாதிரியாக நீங்கியது. மெல்லக் கண் விழித்தார். அவருடைய நெற்றிப் பொட்டிலிருந்தும் மூக்கிலிருந்தும் லேசாக ரத்தம் கசிந்தது. சீனன் மிகவும் பயபக்தியோடும் அன்போடும் அதை ஈரத்துணியால் ஒற்றினான். கிழவர் அப்படியே சிறிது நேரம் படுத்திருந்தார். பிறகு மெல்லப் புரண்டு அவனைக் கவனித்தார்.

அதைக் கண்ட சீனன் உடனே, ''யாரையாவது கூப்பிடட்டுமா? எழுந்திருந்து படுக்கையில் படுத்துக்கிறீங்களா?'' என்று கேட்டான்.

வேண்டாம் என்பதுபோல் கிழவர் தலையை அசைத்துவிட்டார்.

''தண்ணீர்!'' என்று மட்டும் அவர் உதடுகள் முணுமுணுத்தன.

சீனன் ஓடிப்போய் ஒரு கிளாஸில் தண்ணீர் பிடித்து வந்து குடிக்கக் கொடுத்தான். திறந்து கிடந்த கதவை மூடிவிடும்படிச் சைகை செய்துகொண்டே கிழவர் தண்ணிரைக் குடித்தார். அப்புறம்தான் அவர் மெதுவாக எழுந்து உட்கார்ந்தார். சீனன் அவர் முகத்தையே மிகுந்த பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான். கிழவர் பிறகு அவனைப்பற்றி, பெயர், ஊர் என்று ஒவ்வொன்ருக விசாரித்தார். சீனன் தன் கதையைச் சுருக்கமாகக் கூறினுன்.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு, ''தம்பி, அந்த டெலிபோன் புஸ்தகத்தைக் கொண்டு வா!'' என்ருர் அவர்.

சீனன் அதை எடுத்து வந்து கொடுத்தான்.

''தம்பி, பீரோவைத் திறந்து அடித்தட்டிலிருந்து என் உடுப்புகளே எடு!'' என்ருர். அவன் தயங்கியதைக் கண்டு, ''பயப்படாதே! உன்னுடைய பீரோவாக நெனச்சு எடு!'' என்ருர். தட்டுத்தடுமாறி அவன் எடுத்துக் கொடுத்த புதிய ஆடைகளே அவர் சீனனுடைய உதவியுடன் அணிந்துகொண்டார். பிறகு டெலிபோனுக்குப் பக்கத்தில் இருந்த சோபாவில் போய் உட்கார்ந்தார். அவருக்குப் பெருமூச்சு வாங்கியது. மீண்டும் மூக்கின் வழியாக ரத்தம் கசியத் தொடங்கியது. கைகள் வெலவெலத்ததுபோல் ஆடின. இருந்தும் அவர் தீர்மானத்தோடு, டெலிபோனே எடுத்து, ஏதோ எண்களேச் சுழற்றினுர்.

''ஹலோ! பாரிஸ்டர் வேதாசலம்தானே?''

மறுபக்கத்தில் யாரோ பேசுகிருர்கள் என்பது தெரிந்தது.

''உடனே என் தஸ்தாவேஜிகளே எடுத்துக் கொண்டு வரமுடியுமா?'' என்ருர்.

அதற்குப் பதில் கிடைத்ததும் அவர் முகத்தில் சந்தோஷக் குறி தென்பட்டது. ''சரி; தாங்ஸ்; அவ்வளவுதான்!'' என்று சொல்லிக்கொண்டே அவர் டெலிபோன் ரிஸீவரைப் பொத்தென்று போட்டார். தலை தள்ளாடிச் சோபாவிலே சாய்ந்தது.

சீனன் மீண்டும் கையிலிருந்த துணியினுல் அவர் முகத்தைத் துடைத்தான்.

கிழவர் பேசாமல் இருந்தார். பிறகு மெல்ல நிமிர்ந்து ஒரு துண்டுச் சீட்டை எடுத்து அதில் ஏதோ கிறுக்கி, அதைக் கொண்டு போய் வாசலிலிருந்த மானேஜரிடம் கொடுத்து விட்டு வரும்படி சொன்னுர். சீனன் அவருடைய உத்தரவுப் படியே செய்துவிட்டு வந்தான்.

சற்றைக்கெல்லாம் கதவை யாரோ தட்டுவதுபோல் சத்தம் கேட்டது. வெளியில் கட்டைகுட்டையான பெரிய மனிதர் ஒரு

வர் மேல்நாட்டுப் பாணியில் வந்திருந்தார்.

''பெரியவர் இருக்காரா?'' என்றவர் உள்ளே பார்த்துவிட்டு, ''ஹலோ! வரலாமா!'' என்று கேட்டுக்கொண்டே நுழைந்தார்.

''மிஸ்டர் வேதாசலம், வாங்க! நம்ம உயிலைக் கொண்டு வந்திருக்கீங்களா?'' என்றார் கிழவர்.

வேதாசலம் கையிலே ஒரு தோல் பை வைத்திருந்தார். அவர் உடனே, ''அதான் போன் செய்துப் பிட்டீங்களே! எல்லாம் கொண்டு வந்திருக்கேன்!'' என்றார்.

''உயிலை இப்ப பூர்த்தி செய்துப் புடலாமா?'' என்றார் கிழவர்.

''எல்லாம் நிச்சயம் செய்துப் புட்டீங்களா?''

''ஆச்சு.''

''யாருக்கு, தம்பி மகனுக்குத் தானே?''

''இல்லை!''—கிழவர் முகத்தில் கோபம் கொதித்தது.

''பின்னே யாருக்கு?''

''பாரிஸ்டர் ஸார்! எல்லாம் நான் தேடின சொத்து; இல்லியா?''

''அதுலே என்ன சந்தேகம்?''

''அதிலே எனக்கு எல்லா உரிமையும் உண்டு. இல்லையா?''

''அதுலே என்ன சந்தேகம்?''

''எனக்கு மகன் ஒருத்தன் இருக்கான்னு வையுங்க. அவனுக்குக்கூட



நான் இந்தச் சொத்தைக் கொடுக்காமெ இருந்திடலாம். இல்லையா?''

''அதுலே என்ன சந்தேகம்?''

''அட - சந்தேகம்தானையா - கேட்டதுக்குப் பதில் சொல்வீங்களா? ஆச்சா - இஷ்டப்பட்டுத் தெருவிலே போறவனுக்குக் கொடுத்திடலாம், இல்லியா?''

''அதுலே என்ன சந்தே..ஆகா, தாராளமாய்க் கொடுத்திடலாம்.''

''அதனாலே....என் சொத்து, சுதந்தரம், உடைமை எல்லாம் அதைப் போலவே தெருவிலே போய்க் கொண்டிருந்த ஒருத்தனுக்கே கொடுக்கிறதாக முடிவு பண்ணிட்டேன்...''

''ஆ...அப்படியா!'' என்று பாரிஸ்டர்வேதாசலம் தூக்கிவாரிப் போட்டது போல் கேட்டார்.

கிழவர் இப்போதெல்லாம் கொஞ்சம் கூடத் தளர்ச்சி இல்லாமல் பேசி வந்தார்.

''தம்பி சீனா, போய், ஹோட்டல் மானேஜரை நான் வரச் சொன்னதாகக் கூட்டிக் கொண்டு வா!'' என்றார்.

ஆனால் அதற்குள் இரண்டு பெரிய அட்டைப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஓர் ஆள் கதவு திறந்ததும் உள்ளே வந்தான். அவனுக்குப் பின்னால் இரண்டு பேர் இரண்டு பெரிய 'டிரே'யில் ஆகாரங்களைச் சுமந்து கொண்டு வந்து மேஜைமீது வைத்தார்கள்.

சீனனுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆச்சரியத்துடனேயே அவன் மானேஜரிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவர் அவன் கூடவே கிழவருடைய அறைக்கு வந்துவிட்டார். சீனன் ஓரமாக ஒதுங்கி நிற்பதைப் பார்த்து, ''தம்பீ, அந்தப் பெட்டிகள் இரண்டையும். பக்கத்து அறைக்குக் கொண்டுபோய் என்னவென்று பார்த்து, அதை எடுத்து மாற்றிக்கொண்டு வா!'' என்று கனிவோடு சொன்னார் கிழவர்.

அந்தப் பெட்டிகள் இரண்டையும் கொண்டு போய்ப் பிரித்தான் சீனன். அவனுக்கு ஆனந்தம் பொறுக்காமல் மூச்சு முட்டியது, எல்லாம் கண்ணைப் பறிக்கும் ரெடிமேடு ஆடைகள். எல்லாம் சீனா தேசத்து உயர்ந்த ரகங்கள். புஷ் கோட்டு, சட்டை, டிராயர், பான்ட், பனியன் என்று அளவு எடுத்துத் தைத்தவை போல இருந்தன. கிழவர் இதற்குத்தான் கிறுக்கிக் கொடுத்திருக்கிறார் என்று சீனனுக்கு இப்போது புரிந்துவிட்டது. அந்த அறையில் இருந்த நிலைக் கண்ணாடி முன்னால் போய் அழகு பார்த்துக் கொண்டான். அவனுக்கே அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அத்தனை பிரமாதமாக, பெரிய செல்வந்தர் வீட்டுப் பிள்ளை போல ஜம்மென்று இருந்தது. அரை மணி நேரம் பார்த்தும் ஆசை தீராமல் அவன் அவர்கள் இருந்த அறைக்குத் திரும்பினான். அங்கிருந்த மூவரும் அவனையே ஆச்சரியத்தோடு விழித்த கண்ணை இமைக்காமல், திறந்த வாயை மூடாமல் பார்த்தார்கள்.

சற்றுப் பொறுத்து, கிழவர் மட்டும் செல்லமான குரலில், ''தம்பி! இப்படி என் பக்கத்திலே வந்து உட்கார்!'' என்று கூப்பிட்டார். அவன் அவர் அருகில் வந்து உட்கார்ந்தான். அவன் முதுகை ஆசையோடு தடவிக் கொண்டே பாரிஸ்டர் வேதாசலத்தைப் பார்த்து, ''ஐயா, இது வேறு ஒண்ணும் இல்லை. அவ்வளவும் அசல் மாணிக்கம். குப்பையிலே விழுந்து விட்ட விலையிலா மாணிக்கம். நான் தேடி எடுத்து விட்டேன்'' என்றார். மிகவும் சிரமப்பட்டுத்தான் இந்த வார்த்தைகளை அவர் சொன்னார். ஆனால் நாத் தழுதழுத்து விட்டது, தொண்டை கர கரத்துவிட்டது. மீண்டும் தள்ளாமையெல்லாம் ஒன்று சேர அவர் அப்படியே சோபாவில் சாய்ந்து விட்டார். படுத்த அதிர்ச்சியில் மறுபடியும் மூக்கில் ரத்தம் கசிந்தது.

பிறகு கால் மணி நேரம் போல் கையெழுத்துப் போடுவதும் நகல் எடுப்பதுமாக அவர்களுக்குள் ஏதோ பேச்சு நடந்தது. முதலில் கிழவர் கையெழுத்துப் போட்டார். பிறகு பாரிஸ்டரும் ஹோட்டல் மானேஜரும் கையெழுத்துப் போட்டார்கள். அவரும் பாரிஸ்டரு

மாக ஆளுக்கு ஒரு பத்திரம் எடுத்துக் கொண்டார்கள். எல்லாம் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டதால் சீனனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் மற்ற இருவரும் நடுநடுவே சீனனைப் பார்ப்பதும், பத்திரத்தைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். அதனால் அதில் மட்டும் ஏதோ பெரிய விசேஷம் இருக்கும் போலிருந்தது. இன்னும் யாருடைய வரவையோ அவர்கள் எதிர் பார்த்திருப்பதாகவும் தோன்றியது. கிழவரால் சோபாவை விட்டு எழுந்திருக்க முடியவில்லை.

பாரிஸ்டர் பேச வேறு விஷயம் இல்லை என்று கண்டதும் சீனனைப் பார்த்து, அவன் பெயர், பெற்றோர், உறவினர் என்றெல்லாம் கிழவர் கேட்ட தோரணையிலேயே விசாரிக்கத் தொடங்கினார். சீனன் முதலில் தன் பெயரைச் சொல்லி விட்டான். ஆனால் கேள்விகள் மேலே மேலே வளரத் தொடங்கியதும் அவனுக்குச் சந்தேகம் வந்து விட்டது. கிழவருடைய அனுமதியில்லாமல் அவருக்குப் பதில் சொல்வது அவனுக்குச் சரியாகப் படவில்லை. சிற்றப்பன் சின்னப் பக்கிரியையும் சின்னம்மா காளியாத்தாளையும் பற்றிச் சொல்ல அவனுக்கு விருப்பமும் இல்லை.

சற்றைக்கெல்லாம் டாக்டர் ஒருவர் வந்து சேர்ந்தார். உடனே கிழவரைப் பரிசோதிக்கத் தொடங்கினார். சுமார் கால் மணி நேரம் போல் ஆராய்ந்த பிறகு, "உயிருக்கு ஒன்றும் பயமில்லை; எதற்கும் இரவு போனால்தான் நல்லது. யாராவது உறவினர்கள் இங்கே இருக்கிறார்களா?" என்றார் டாக்டர்.

"இதோ, இந்தப் பையன்தான் அவருடைய சுவீகாரப் பையன். அவருடைய சொத்து முழுவதையும் இந்தப் பையனுக்கே சேரும்படி சற்று முன் உயில் எழுதி வைத்துவிட்டார்...." என்றார் வேதாசலம்.

சீனனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. சினிமாவில் கூட இவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் ஒருவனுக்குத் திடீரென்று கிடைப்பதாக அவன் பார்க்கவில்லை. இது எல்லாவற்றையும் தூக்கியடிப்பதாக இருந்தது. கிழவருக்கு வாரிசு என்றால் இந்தப் பீரோ, இதிலுள்ள நகைகள், பணம், அந்தச் சிறிய பெட்டி எல்லாம் இனிமேல் அவனுடையவையா? இது என்ன சொப்பனமா, இல்லை, நிஜந்தானா?

கிழவர் கண்களைத் திறந்து, "தம்பி, சீனா!" என்று கூப்பிட்டார், மிகவும் பலவீனமான குரலில்.

சீனன் அருகில் போனதும், கிழவர் தம் கையில் வைத்திருந்த சாவிக் கொத்தை அவனிடம் கொடுத்தார். பிறகு தம்மிடமிருந்த பத்திரத்தைக் கொடுத்து, அரக்குச் சீல் வைத்து, விலாசம் எழுதி, அதிகாரிகளுக்குத் தபாலில் அனுப்பச் சொன்னார். அதனுடைய நகல் பிரதியில் எல்லார் முன்னிலையிலும் மீண்டும் கையெழுத்திட்டு, அவனிடம் கொடுத்தார்.

இதையெல்லாம் செய்து முடிக்க வெகு நேரமாயிற்று. மிகுந்த சிரமத்துடன்தான் இவ்வளவையும் அவர் செய்தார். "அப்பாடா, இனி நான் செத்தால்கூடக் கவலையில்லை. ஆனால் மிஸ்டர் வேதாசலம்! பையனைப் பாதுகாக்க வேண்டியது இனி உம்முடைய பொறுப்பு. அவனைச் சேர்ந்தவர்கள் யாராவது வந்தால், அவன் எப்படி விரும்புகிறானோ அதேபோல நடந்து கொள்ளுங்கள். சரி, இனி நீங்கள் போகலாம், கொஞ்சம் படுத்துத் தூங்கினால் தேவலை போலிருக்கிறது" என்றார்.

பாரிஸ்டர் வேதாசலம், டாக்டர், ஹோட்டல் மானேஜர் மூவரும் கிழவரிடமும் சீனனிடமும் விடை பெற்றுக்கொண்டு வெளியில் வந்தார்கள்.

"இதில் ஏதோ மர்மம் இருக்கிறது!" என்றார் மானேஜர்.

"எதுவாக இருந்தால் என்ன? அவர் சுய ஞாபகத்துடன்தான் பேசுகிறார்!" என்றார் டாக்டர்.

"அதில் என்ன சந்தேகம்? அப்படியானால் அவருடைய விருப்பப் படிதான் எதுவும் நடக்க வேண்டும். நான் லாயர். கட்சிக்காரர் விருப்பப்படிதான் நான் நடக்கக்

கடமைப்பட்டிருக்கிறேன்...'' என்றார் பாரிஸ்டர்.

அவர்கள் எல்லாரும் போன பிறகு, கிழவர் சீனனிடம் அந்தச் சிறிய பெட்டியையும் கொடுத்தார். ''அதைப் பத்திரமாக வைத்துக் கொள். அதில்தான் உன்னுடைய அதிருஷ்டம் எல்லாம் அடங்கியிருக்கிறது. போய் அந்தப் பீரோவைத் திறந்து அதைப் பத்திரப்படுத்தி வை. பாரிஸ்டர் என் சொத்துக்களை உன்னிடம் ஒப்படைப்பார். ஆனால் உனக்கு வேண்டிய பணம் எல்லாம் நாளையே கிடைக்க நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ யாராக இருந்தாலும் இனி என்னுடைய பேரன். நான் இருந்தாலும் பேரன்தான்; இறந்தாலும் பேரன்தான்!'' என்று கூறிவிட்டு அவர் அசதியால் கண்ணை மூடிக்கொண்டார்.

சீனனுக்கு வேறு ஒன்றும் சட்டென்று கேட்கத் தோன்றவில்லை. ''அந்த மண்டை ஓடு ஏன் இந்தப் பீரோவில் இருக்கிறது?'' என்று கேட்டான்.

கிழவருக்கு இதைக் கேட்டதும் மீண்டும் அதிர்ச்சி ஏற்பட்டது. அதைப் பற்றி எதுவும் பேசவேண்டாம் என்று ஜாடை காட்டினார்.

இரவில் வெகுநேரம் சீனன் அவருக்குத் துணையாக விழித்துக் கொண்டிருந்தான். கிழவர் ஏதேதோ சொல்லிக்கொண்டேயிருந்தார். அப்புறம் அவனையறியாமலே தூங்கிவிட்டான். கண் விழித்தபோது மணி ஏழுக்குமேல் ஆகிவிட்டது. படுக்கையில் கிழவர் பிரக்ஞையற்ற நிலையில் படுத்திருந்தார். எத்தனை முறை, ''தாத்தா; தாத்தா!'' என்று கூப்பிட்டு எழுப்பிப் பார்த்தும் பயன்படவில்லை. பீரோவைச் சாத்திப் பூட்டுவதற்காக வந்தவன் தற்செயலாக அதைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! அதிலிருந்த மண்டை ஓட்டைக் காணவில்லை.

அவன் உடனே அதைப் பூட்டிக்கொண்டு, அந்த அறையைவிட்டு வெளியில் வந்தான். முதல் காரியமாக உறையைத் தபாலில் சேர்த்தான். மானேஜருடன் திரும்ப உள்ளே நுழைந்த சமயத்தில் கிழவருடைய தலை சாய்ந்துவிட்டது. சீனனுக்கு உண்மையில் நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறிக் கதறி அழுதான். ஹோட்டல் மானேஜரும் டாக்டரும் அவனைத் தேற்றினார்கள். பழைய சீனனாக இருந்தால் அடித்து விரட்டியிருப்பார் மானேஜர். ஆனால் அன்று அவன் பேப்பர் விற்கும் சீனன் அல்ல; லட்சாதிபதி சீனன்!

அதனால் கண்ணைத் துடைக்கிறார் மானேஜர்; காபி கொண்டு வந்து, ''ச்சூ ச்சூ!'' என்று ஆறுதல் சொல்கிறார் இன்னொருவர். டாக்டர் வந்து ''இன்னும், ஏதாவது வேண்டியிருந்தால் சொல்லியனுப்புங்க, தம்பி!'' என்கிறார்.

இதையெல்லாம் பார்த்த சீனனுக்கு எல்லாம் என்னவோ வேதாளம் - விக்கிரமாதித்தன் கதையில் நடப்பதுபோலத்தான் இருந்தது.

பாரிஸ்டர் வேதாசலம் ஒரு சூட்கேஸ் நிறையப் புத்தம் புது நோட்டுக்களாகக் கொடுத்துவிட்டு, கிழவருடைய அந்திமக் கிரியை முடியும் வரையில் இருந்ததைப் பார்த்தபோது அதிசயக் கனவாகத் தோன்றியது.

கிழவர் எப்படி ஹார்பருக்கு வந்தார், ஏன், எதற்காக, யாரோடு சண்டை போட்டு விழுந்தார் என்ற மர்மம் எல்லாம் எதுவும் தெரியாமலே போய்விட்டது.

மூன்றாம் நாள் அவனுக்குக் கம்பெனியிலிருந்து ஒரு புதுக் கார் வந்து சேர்ந்தது. கிழவருடைய ஆர்டரின்பேரில் வந்த கார் அது. ஆனால் அதில் ஏறிச் செல்ல அவருக்குக் கொடுத்துவைக்கவில்லை.

சீனன் அதில் போய் ஏறி உட்கார்ந்து கொண்டபோது, ''பாருடா, பேப்பர் விற்ற பரதைப் பயலுக்கு வந்திருக்கிற பவிஷை! அதிருஷ்டம்னா இப்படில்லேடா அடிக்கணும்!'' என்று யாரோ சொல்வது காதில் விழுந்தது. அப்படிச் சொல்வது யார் என்று பார்க்க எண்ணி, சீனன் திரும்பினான். ஆனால் வண்டி அதற்குள் திரும்பிவிட்டது.

(தொடரும்)

ஆகாய விமானம்

- அழகனூர் -

1. ‘உர்உர்’ என்று சென்றிடுவேன்;
உயரப் பறந்து வந்திடுவேன்!
‘கிர்கிர்’ என்றும் கத்திடுவேன்;
கண்ணை உயர்த்திப் பார்த்திடுவீர்!

2. ஆட்டம் அசைவு இல்லாமல்
ஆட்களை ஏற்றிச் சென்றிடுவேன்;
ஓட்டமாய் ஓடி உலகினிலே
எத்தனை தூரம் கடந்திடுவேன்!

3. மோட்டார் காரின் பாதையைப்போல்
மோதி இடித்துக் கொள்ளாமல்
காட்டா றெங்கும் போவதுபோல்
காற்றில் கடுகிப் போய்வருவேன்!

4. ஆபத் தில்லா ஒருவழியை
ஆய்ந்து பார்த்துக் கூறிடுவீர்?
ஆதலின் நானும் சிலசமயம்
அஞ்சும் வழியில் போவதுண்டு.

சக்கரங்கள்

புரொபஸர் விஞ்ஞானம்





தூண்களை உருளைக்கட்டைகளின் மேல் வைத்து நகர்த்துதல்



பிறகு ஆதி மனிதர்கள் உருளைக் கட்டைக்கு ஓர் அச்சை அமைக்கக் கற்றுக்கொண்டார்கள்.

அதற்குப் பிறகு வட்ட வடிவமான சக்கரம் தேரின் சக்கரத்தைப்போல் அமைக்கப்பட்டது. எகிப்து, பாபிலோனியா, இந்தியா முதலிய நாடுகளில் இப்படித்தான் முதன் முதலாக வண்டி உண்டாயிற்று. பிறகு வட்டையும் ஆரமும் உடைய சக்கரங்களை அமைக்கக் கற்றுக்கொண்டார்கள். இவ்வகையான வண்டிகளும் தேர்களும் எல்லா நாடுகளிலும் இருந்தன.

முதலில் இரண்டு சக்கர வண்டிகளும், பின்பு நாலு சக்கர வண்டிகளும் அமைக்கப்பட்டன.

முதன் முதலாக அமைக்கப்பட்ட சக்கரம் போட்ட வண்டி போர்த் தேராக இருந்திருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இவைகளின் அச்சும் மரத்தால் ஆனது.



கல் வெட்டுகளில் உள்ள போர்த்தேர்



ஆதி காலத்திய வண்டி

6



வண்டிச்சக்கரம்

7

பின்பு, இவை மேன்மேலும் திருத்தம் அடைந்தன. மாடு, குதிரை முதலியவைகளை இவற்றில் பூட்டி இழுக்கச் செய்தார்கள்.

அப்போது பாதைகள் நன்றாக இல்லை. ஆகையால் வண்டிகளை அழகாகவும் அழுத்தமாகவும் செய்தார்கள்.

பின்பு பாதைகள் நன்றாக அமைக்கப்பட்டன. பாரம் ஏற்றும் வண்டிகள், சவாரி வண்டிகள், உல்லாசப் பிரயாண வண்டிகள் எனப்புதுப் புது வண்டிகள் தோன்றின. அவற்றின் சக்கரங்களும் சீர்திருத்தம் அடைந்தன.

அச்சு இரும்பினால் செய்யப்பட்டது. சக்கரங்களுக்குக் குடம், ஆரம், வட்டை, பட்டை இவைகள் அமைக்கப்பட்டன. சக்கரங்கள் எளிதாகச் சுழலும் பொருட்டு அச்சுக்களுக்கு உயவுப் பொருள்கள் (வண்டிமை, எண்ணெய் போன்றவை) பூசப்பட்டன.

நாளடைவில் சேணம், வார் முதலியவைகளும் தோன்றி வாகனங்களை அழகுபடுத்தின.

ரஸ்தாக்கள், பாலங்கள் முதலியவைகள் நன்றாக அமைக்கப்பட்டபின் வண்டிகள் விரைவாகவும் நன்றாகவும் வளர்ச்சியடைந்தன. இனி ஒவ்வொன்றைப்பற்றியும் விரிவாகக் கவனிப்போம்.

நாலும் தெரிந்தவன்

பி. கே. சாமி

அன்று மாலை நான்கு மணி இருக்கும். நாலாம் நம்பர் பஸ்ஸுக்காகக் காத்து நின்றேன்; பஸ் ஏனோ சீக்கிரம் வரவில்லை.

அப்போது நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்தான் ஒரு சிறுவன். சும்மா வந்தானா? "பேப்பர்.. நாலு பக்கம், விலை ஒரணா ஸார்! நாலு பக்கம் ஒரணா!" என்று கூவிக் கொண்டே ஓடி வந்தான்.

பைக்குள் கை விட்டுத் துளாவி, நான்கு காலணாக்களை எடுத்து நீட்டி ஒரு பத்திரிகையை வாங்கினேன். அதிலே—

நான்மாடக் கூடலில் நடந்த நாலாவது தமிழ்ச் சங்க பொன் விழா பற்றிய செய்திகள் நிறைந்திருந்தன. அவை தவிர, இன்னும் நானாவிதச் செய்திகள், படங்கள், விளம்பரங்களுக்குக் கணக்கே இல்லை.

வீடு வந்து சேர்ந்ததுமே இந்த நான்கைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டுவிட்டேன்.

*　　*　　*

யுகாதி காலந்தொட்டே இந்த நான்கு ஆரம்பித்துவிடுகிறது! கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆக மொத்தமே நான்கு யுகங்கள்தான். கலியுகத்துடன் உலகம் அழிந்துவிடுகிறது என்பர்.

பண்டை நாட்களில் நான்கு வேதங்களிலும் பாண்டித்தியம் பெற்ற வித்துவான்கள் இருந்தார்கள். அவை ரிக் வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வண வேதம் என்பனவாம்.

முன்காலத்தில் வேந்தர்கள் தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை (இரத, கஜ, துரக, பதாதி) ஆகிய நாலு வகைப் படைகள் வைத்திருந்தார்கள் என்றும் அவர்கள் சாம, தான, பேத, தண்டம் என்ற நாலுவித உபாயங்களைக் கையாண்டார்கள் என்றும் அறிகிறோம்.

பழங்கால நூல்கள் யாவும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் பற்றி எடுத்துரைக்கின்றன. மாதா, பிதா, குரு, தெய்வம் இந்த நால்வரும் மரியாதைக்கும் வணக்கத்துக்கும் உரியவர் ஆவர்.

மனிதனது வாழ்க்கை நிலையை பிரம்மசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என நாலு வகையாகவே வகுத்திருக்கிறார்கள்.

*　　*　　*

இலக்கண இலக்கியங்களில்தான் இந்த நான்குக்குக் குறைவு இருக்கிறதா, என்ன?

எழுத்துக்களையே நாலு வகையாகத்தான் பிரித்திருக்கிறார்கள்: உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து.

செய்யுட்களில் நாலு அடிகள் கொண்ட வெண்பாக்களே மிகவும் மலிந்துள்ளன. நாலு அடிகள் கொண்ட வெண்பாக்களால் ஆன ஒரு நூலுக்கு 'நாலடியார்' என்றே பெயரிடப் பட்டுள்ளது. இலக்கியங்களில் நிலப்பிரிவு குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என நான்கு வகைப்படும்.

ஒரு தினத்தை, வைகறை, நண்பகல், மாலை, யாமம் என நான்கு பிரிவாகப் பகுப்பர்.

பூகோள சாஸ்திரம் முழுவதுமே கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்ற நான்கு திசைகளுக்குள் அடக்கம், அல்லவா? காற்றிலும் கொண்டல், கோடை, தென்றல், வாடை என்பதாக நாலு வகை உண்டு.

விச்சு: ஸார்! நான் எழுதின கதைகள் எல்லாம் அடுத்த வாரம் ஒவ்வொன்றாக வரப் போகின்றன.

வாத்தியார்: எங்கே, எங்கே, எந்தப் பத்திரிகையில்?

விச்சு: எந்தப் பத்திரிகையி லும் இல்லை, ஸார்! எல்லாம் திரும்பி வரப்போகின்றன என்று சொன்னேன்.

—சுகந்தா, மாயூரம்.

கணிதத்தில் மட்டும் என்ன? ஒன்று கூட்டலாக இருக்கும்; அல்லது கழித்தல்; அல்லது பெருக்கல்; அல்லது வகுத்தல். இந்த நான்கை யும் விட்டால் கணக்கே இல்லை!

* * *

சைவ நூல்கள் யாவும் சமயக் குரவர் நால்வராகிய திருநாவுக் கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்தி ஆகியோரைப்பற்றி அறிவிக்கின் றன. சந்தான குரவரும் நால் வரே: அவர்கள் உமாபதி சிவாசாரி யார், மறைஞான சம்பந்தர், அரு ணந்தி சிவாசாரியார், மெய்கண்ட தேவர் என்பவராம்.

இதிகாச புராணங்களுக்கெல் லாம் ஓர் உதாரணமாகக் கொள் ளக்கூடிய ராமாயண காவியத்தில் தசரத புத்திரர் நால்வரே வருகின் றனர்; ராமர், லட்சுமணர், பரதர், சத்ருக்கனர் ஆகிய இவர்களையே குறிப்பிடுகிறேன்.

மனித அறிவை நான்கு வகையா கப் பிரித்துப் பேசுவர் வடமொழி யாளர். ஸ்மரணை என்று இறந்த கால அறிவையும், புத்தி என்று நிகழ்கால அறிவையும், மதி என்று எதிர்கால அறிவையும், முக்காலம் பற்றிய உணர்வை பிரக்ஞை என் றும் குறிப்பர்.

மகான் புத்தரது கொள்கைகள் நான்கு சத்தியங்களை அடிப்படை யாகக் கொண்டவை. அவை துக் கம், துக்க உற்பத்தி, துக்க நிவா ரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பனவாம்.

மகாவிஷ்ணு, பரமசிவன், விநாய கர் இவர்களுக்கெல்லாம் நான்கு கைகள் என்பதுதான் நமது உரு வகம்.

* * *

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று கேள்விப் பட்டதில்லையா? இது ஆண்களுக் குத்தான்! பெண்களின் நாலு விசேஷங்கள் அச்சம், மடம் நாணம், பயிர்ப்பு ஆகியவையே.

சீட்டாட்டத்திற்கு நாலு பேராவது சேர்ந்தால்தானே சுவா ரஸ்யம்? சீட்டுகளில் ஸ்பேட், ஆடு தன், டயமண்டு, கிளாவர் என்ற நாலே இனங்கள் தான் உண்டு.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் வருஷம் வருகிறது. ஒலிம்பிக் பந்தய விளையாட்டுகளை யும் நான்கு வருஷங்களுக்கு ஒரு முறையே நடத்துகின்றனர்.

வருஷத்தில் நான்கு ஸீஸன்கள் வருகின்றன. மாதத்தில் நான்கு வாரங்கள். தினசரி எட்டு மணி நேர வேலையில் காலை நான்கு மணி, பிற்பகல் நான்கு மணி என்று அமைத்துக்கொண் டிருக்கிறோம்.

இவ்வாண்டு கலைமகள் வெள்ளி விழாவை முன்னிட்டு சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம் ஆகிய நாலு இனங்களிலும் ஒரு பரிசுத் திட்டம் வெளியிட்டிருக்கிறார்கள்.

கண்ணனுக்கு ஆண்டு சந்தா, மலருள்பட நான்கு ரூபாய்தான் என்பதும், கண்ணன் முகவரி 'மயிலாப்பூர் சென்னை-4' என்பதும் நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியுமே!

* * *

என்னுடைய அறையின் நான்கு சுவர்களுக்கு மத்தியில், நாற்காலியில் அமர்ந்துகொண்டே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். 'நான்கு பற்றிய இந்தக் கட்டுரை 'நன்கு' அமைந்திருக்கிறது என்று நாலு பேர் பாராட்டினால் அதுவே எனக்குப் பரம திருப்தி அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால்—

அனுப்பிய நாலு நாளில் இது திரும்பாமல் இருக்கவேண்டுமே! அதற்காக நான்முகக் கடவுளை மனமார வேண்டிக் கொள்கிறேன்!

புதுப் பையன்

நெ. சி. தெய்வசிகாமணி

ஒரு வழியாகக் கோடை விடுமுறை நாட்கள் முடிவடைந்தன. பின்னர் பள்ளிக்கூடம் திறந்துவிட்டார்கள். வருஷம் பூராவும் ஒரே மாதிரியான புத்தகங்களைப் படித்து அலுத்துப்போன எனக்கு, புதுப்புத்தகங்கள் கிடைக்கப் போவதும் வகுப்பு மாறுதலும் மகிழ்ச்சியை அளித்தன. அதே நேரத்தில் என்னுடன் படித்துக் கொண்டிருந்த நண்பர்களில் சிலர் பரீட்சையில் தேருமல் போனது மனத்துக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

மறுநாள் பள்ளிக்குப் போனேன். எங்களையெல்லாம் வரிசையாக நிற்கவைத்தார்கள். பரீட்சையில் தேறிய மாணவர்களின் பெயர்களைப் படித்தார்கள். என் பெயரையும் படித்தார்கள். எங்களை யெல்லாம் 'ஆருவது வகுப்பிலிருந்து ஏழாவது வகுப்புக்கு மாற்றியிருக்கிறது' என்ருர்கள். நாங்கள் ஏழாவது வகுப்பறைக்குள் நுழைந்தோம். என்னுடன் ஆரும் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த நண்பர்களில் பரீட்சையில் தவறிப் போனவர்கள் மட்டும் வகுப்பறையில் உட்கார்ந்திருந்தார்கள். கடைசியாக ஒரு வளர்ந்த பையன் வந்தான். அவனைப் பார்த்தால் புதுப் பையனைப்போல இல்லை. நேராக நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்தான். ''எழுந்திரு. இது என் இடம்'' என்ருன்.

''இது என்ன அநியாயம்! இன்றைக்குத்தானே பள்ளிக்கூடம் திறந்தார்கள். அதற்குள் வருஷம் பூராவும் உட்கார்ந்திருந்த மாதிரி உரிமை கொண்டாட வந்துவிட்டாயே!'' என்றேன்.

''மரியாதையாக எழுந்திரு. என் இடம்தான் இது. இரண்டு வருஷமாக நான் இதே இடத்தில் தான் உட்கார்ந்து வருகிறேன்'' என்ருன் அவன்.

'இரண்டு வருஷமாக' என்று அவன் சொன்னதும் மாணவர்களில் சிலர் சிரித்துவிட்டார்கள். சிரித்தவர்களை யெல்லாம் எரித்துவிடுவதைப்போல பார்த்தான். என் நண்பன் மாதவன் சமாதானப் பிரியன். அவன் இந்தத் தகராறில் தலையிட்டு, ''நீதான் எழுந்து வேறு இடத்தில் உட்காரேன், பாவம்! இந்த இடத்தில் இரண்டு வருஷமாக உட்கார்ந்திருந்தானும். இன்னும் எத்தனை வருஷங்கள் வேண்டுமானுலும் இங்கேயே உட்கார்ந்திருக்கட்டும்'' என்ருன்.

''அநாவசியமாகப் பேசினுயோ, பல்லை உடைத்து விடுவேன்'' என்ருன் அந்த வளர்ந்த பையன். அவன்பேசிய தோரணையைப் பார்த்தால் 'ரௌடி'யோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. நானும் பேச்சை அதிகம் வளர்த்தாமல் எழுந்து வேறு இடத்துக்குச் சென்றுவிட்டேன்.

உபாத்தியாயர் வந்தார். பாடப் புத்தகங்கள் வராததால் அவர் பாடம் நடத்தவில்லை. கதைகள் சொல்லிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழிந்தது. பியூன் ஒரு சிறுவனை அழைத்துக் கொண்டு வந்து உபாத்தியாயரிடம் விட்டான். ''சார், இவன் புதுப் பையன். ஹெட்மாஸ்டர் விட்டு விட்டு வரச் சொன்னுர்'' என்ருன்.

பியூன் போனதும் உபாத்தியாயர் புதுப் பையனைப் பார்த்து, ''உன் பெயர் என்ன?'' என்ருர்.

''கே. அருள்தாஸ்.''

''அருள்தாஸ்! கிறிஸ்துவப் பெயர் மாதிரி இருக்கே!''

''ஆமாம், கிறிஸ்துவர்தான்!''

''சரி, போய் உட்கார்'' என்ருர் உபாத்தியாயர். அருள்தாஸ் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

கொஞ்ச நேரம் சென்றது. என் பக்கம் திரும்பினுன். ''உன் பெயர்?'' என்று கேட்டான்.

''மணி'' என்றேன். இதற்குள் முதல் 'பீரியடு' முடிவதை அறிவிப்பதற்காக மணி அடித்தது. உபாத்தியாயர் சென்றுவிட்டார். அடுத்த 'பீரியடு' உபாத்தியாயர் வருவதற்குள், அதற்குமுன் அவன் எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தான் என்றும், அவன் வீடு எங்கிருக்கிறதென்றும் விசாரித்தறிந்து கொண்டேன். அவன் அப்பா வெளியூரில் இருக்கிறாராம். மாமா வீட்டில்தான் அவன் தங்கியிருக்கிறானாம். அநேகமாக அவன் அப்பாவும் கூடிய விரைவில் இங்கே வந்துவிடுவார் என்றும் சொன்னான். பல நாட்களாகப் பழகியவர்களைப்போல நாங்கள் இருவரும் நண்பர்களாகி விட்டோம். இது என் பழைய நண்பர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. 'இது என்னடா இது, வருஷக் கணக்காகப் பழகிய நம்மையெல்லாம் விட்டுவிட்டு ஒரு புதுப் பையனுடன் இப்படிப் பேசுகிறானே!' என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

சாப்பாட்டுக்குப் போவதற்காகப் பகல் மணி அடித்தது. எல்லோரும் சென்றுவிட்டார்கள். நான் மட்டும் வீட்டுக்குப் போகவில்லை. வீடு வெகு தூரத்தில் இருந்ததால் எனக்கு வீட்டிலிருந்து சாப்பாடு கொடுத்தனுப்புவார்கள். தினமும் பன்னிரண்டரை மணிக்கே வந்துவிடும் அந்த அம்மாள் இன்று ஒன்றரைமணி ஆகியும் வராதது வருத்தத்தை உண்டாக்கியது. அதே நேரத்தில் பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. அப்போது தோளின் மேல் யாரோ கையைப் போட்டதுபோல் உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அருள்தாஸ் சாப்பாட்டுப் பையுடன் நின்றுகொண்டிருந்தான்.

"என்ன, வெளியே நின்று கொண்டிருக்கிறாயே!" என்றான்.

"சாப்பாடு கொண்டு வருபவள் வரவில்லை."

"அதற்கென்ன, என் சாப்பாடு இருக்கிறது. நாம் இரண்டு பேரும் சாப்பிடலாமே?" என்றான்.

நான் தயங்கி நின்றேன். பசி வயிற்றைக் கிள்ளியது. அவன் கையைப் பிடித்து இழுத்தான். அவன் அழைப்பைத் தட்ட முடியாமல் அவனுடன் சென்றேன்.

நானும் அருள்தாஸும் வகுப்புக்குள் நுழையும்போது, "அவனைத் தீண்டாதே! கிறிஸ்துவன் சாப்பாட்டைச் சாப்பிட்டவன்" என்று என்னைக் குறித்து அந்த வளர்ந்த பையன் மாதவனிடம் உரக்கக் கத்தினான்.

மாதவன் அந்த வளர்ந்த பையனைப் பார்த்து, "அவனைப் போய்ச் சொல்கிறாயே! சாயபு ஓட்டலில் இருந்து நீ டீ சாப்பிட்டதை நான் பார்த்தேனே. நீ மட்டும் அந்த ஓட்டலில் போய்ச் சாப்பிடலாமா?" என்றான் மாதவன்.

"அது என் இஷ்டம்" என்றான், வளர்ந்த பையன்.

"அதைப் போலத்தான் இதுவும் அவன் இஷ்டம். இதில் போய் நீ தலையிடாதே!" என்று சமாதானப் படுத்தினான் மாதவன்.

அடுத்த நாள் காலை. வகுப்புக்குள் நுழைந்ததும் கரும்பலகையைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போய்விட்டேன். அதில் கணக்கு வாத்தியாரைப் போல ஓர் உருவத்தைப் போட்டு, மூக்கைக் கொஞ்சம் நீளமாகப் போட்டு, 'கிளி மூக்கு வாத்தியார்' என்று அதனடியில் எழுதியிருந்தது. இம்மாதிரியான செய்கைகள் எனக்குப் பிடிப்பதில்லை. யார் இவ்வளவு துணிச்சலாகச் செய்திருப்பார்கள்? அந்த 'இரண்டு வருஷம்' தான் செய்திருக்க வேண்டும்!

முதல் பீரியடே கணக்கு. உபாத்தியாயர் வந்தார். ஏதோ ஒரு கணக்குப் போட்டுக் காட்டுவதற்காகக் கரும்பலகைப் பக்கம் போனவர் திடுக்கிட்டார். "இந்தப் படத்தை யார் போட்டது?" என்று கோபத்துடன் உறுமினார்.

பிள்ளைகள் நடுங்கிவிட்டனர்; ஒருவர்கூட வாய் திறக்கவில்லை. பிரம்பினால் மேஜையை அடித்துவிட்டு, "உண்மையைச் சொல்கிறீர்களா, இல்லையா? நடேசா, யார் போட்டது?" என்றார்.

"நான் இல்லை, ஸார்!" என்று நடுங்கியபடியே கூறினான், அவன்.

"டேய் 'ரெண்டு வருஷம்!' நீ போட்டயா?"

"நான் இல்லை, ஸார்! புதுப் பையன்தான் அந்தப் பக்கம்..."

"புதுப் பையனா? யார் அவன்? அருள்தாஸா? எழுந்திரு. நீயா போட்டே?"

"இல்லை, ஸார்! அவன் பொய் சொல்கிறான்?" என்று சொல்லிவிட்டு நேரே மேஜையண்டை வந்தான். மேஜைமேல் இருந்த சாக்குத்துண்டை எடுத்து, 'கிளி மூக்கு வாத்தியார்' என்று எழுதியிருந்ததின் அடியில் மறுபடியும் 'கிளி மூக்கு வாத்தியார்' என்று எழுதினான். 'என்னடா, இது! இவன் இப்படிச் செய்கிறானே!' என்று பயந்து போனேன் நான்.

"ஸார், இந்தக் கையெழுத்துக்கும் மேலே இருக்கிறதுக்கும் வித்தியாசம் பாருங்கள்" என்றான். உபாத்தியாயர் பார்த்தார். இரண்டும் வெவ்வேறு மாதிரியாக இருந்தன.

"சரி நீ போ! யார் போட்டது என்பதை நான் கண்டு பிடிக்காமல் விடமாட்டேன்" என்று சொல்லி அருள்தாஸை அனுப்பிவிட்டார்.

அன்று பள்ளிக்கூடம் விட்டதும் அருள்தாஸ் நேரே வீட்டுக்குச் சென்றுவிட்டான். மாலை நான் விளையாட்டு மைதானத்திற்குப் போனேன். அங்கே இரண்டு வருஷங்கள் பரீட்சையில் தவறிவிட்ட கணேசனும், (அந்த வளர்ந்த பையன்) சுந்தரமும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் பின்னால் வருவது அவர்களுக்குத் தெரியாது.

"டேய், சுந்தரம்! அந்தக் கிறிஸ்துவப் பையனும், மணியும் ரொம்பத் திமிராக இருக்கிறார்கள். நாளைக்குப் பார், வேடிக்கையை! முதலில் அந்தப் புதுப் பையன் கொட்டத்தை அடக்குகிறேன். அப்புறம் மணி நம்மிடம் வாலாட்ட

மாட்டான்'' என்று கணேசன் சுந்தரத்திடம் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஏதோ சூழ்ச்சி செய்து அருள்தாஸை மாட்டி வைக்க, கணேசன் வலைவிரிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டேன். அருள்தாஸுக்கு அடி வாங்கி வைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் கணக்கு வாத்தியாரைப் போல கேலிச் சித்திரம் எழுதி, அவனை மாட்டி வைக்கப் பார்த்தான். ஆனால், அருள்தாஸோ தன் தைரியத்தினாலும் சமயோசித புத்தியினாலும் தப்பித்துக் கொண்டான். அடுத்து என்ன செய்வானோ? இதை நினைக்கவே என் மனத்துக்கு வேதனையாக இருந்தது. வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போய்விட்டேன்.

அடுத்த நாள் அருள்தாஸைப் பார்த்து, ''உஷாராயிரு. கணேசன் உன்னை மாட்டிவைக்கப் பார்க்கிறான்'' என்றேன். அவன் சிரித்தபடியே, ''கவலைப்படாதே! நான் எதற்கும் பயப்படமாட்டேன்'' என்றான்.

அன்று மாலை பள்ளிக்கூட மணி அடிப்பதற்கு முன் பியூன் வந்து, ''மணி அடித்ததும் எல்லோரையும் பிரார்த்தனைக் கூட்டத்தில் வந்து நிற்கும்படியாகத் தலைமையாசிரியர் சொன்னார்'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

'என்ன விஷயமோ?' என்று ஒன்றும் புரியாமல் எல்லோரும் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்றோம். எங்களுக்கு முன்னால் எல்லா வகுப்பு மாணவர்களும் வந்து கூடியிருந்தனர். உபாத்தியாயர்களும் இருந்தனர். எல்லோரும் வந்த பிறகு தலைமையாசிரியர் பேச ஆரம்பித்தார்.

''குழந்தைகளே! எனக்கு வயதாகிவிட்டது. நான் நாளை முதல் விலகிக் கொள்கிறேன். இவ்வளவு நாட்கள் உங்களுடன் பழகிவிட்டு உங்களைப் பிரிந்து செல்வதென்றால் வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால், வரப்போகிற தலைமையாசிரியர் என்னைவிட உங்களிடம் அன்பாக நடந்து கொள்வார். அவர் ரொம்பவும் நல்லவர். வெளியூரிலிருந்து நாளைக் காலை வருகிறார். ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே, நம் பள்ளியில் ஏழாம் வகுப்பில் படிக்கும் அருள்தாஸின் அப்பாதான் புதிதாக வரப்போகும் தலைமையாசிரியர்.''

எல்லோரும் அருள்தாஸையே பார்த்தார்கள். நான் சந்தோஷத்துடன் அவன் துடையில் மெதுவாகக் கிள்ளினேன். கணேசன் எதையோ பறி கொடுத்தவன் போல் இருந்தான். எல்லோரும் கலைந்து போன பிறகு, கணேசன் எங்களிடம் வந்தான்.

''அருள், நான் ஒரு தப்பான காரியம் செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு'' என்றான். ''அன்றைக்குக் கணக்கு வாத்தியாரின் படத்தை நான்தான் போட்டேன் என்றாயே. அதுதானே? நான் அன்றைக்கே அதை மறந்துவிட்டேனே! நீதானே ஞாபகப்படுத்துகிறாய்'' என்றான் அருள்தாஸ்.

''அது இல்லை. நீ சாப்பாட்டுக்குப் போயிருந்தபோது என் புத்தகத்தை யாருக்கும் தெரியாமல் உன் பையில் போட்டுவிட்டேன். பிறகு உன்னைத் திருடன் என்று எல்லோர் எதிரிலும் அவமானப்படுத்தி, தலைமையாசிரியரிடம் சொல்லி அடி வாங்கி வைக்கவேண்டும் என்று நினைத்தேன்'' என்றான் கணேசன்.

அவன் சொன்ன பிறகு பையினுள் பார்த்தான் அருள்தாஸ். அதில் அவன் புத்தகங்களுக்கிடையில் கணேசனின் புத்தகமும் இருந்தது. அதை எடுத்து கணேசனிடம் கொடுத்துவிட்டு, ''நல்லவேளை! என் அப்பா தலைமையாசிரியராக இருக்கும்போது இதைச் செய்யாமல்விட்டாயே! என் அப்பா தன் சொந்த மகனாயிருந்தாலும் மன்னனின் மகனாயிருந்தாலும் யார் தவறு செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை கொடுப்பார். நல்லவேளை, என் அப்பாவின் அடியிலிருந்து தப்பினாய் போ!'' என்று சிரித்தபடியே சொன்னான் அருள்தாஸ். கணேசன் தலையைக் கவிழ்த்துக்கொண்டான்.

அவன் அம்மா

சசிகலா

அன்றைக்கு எனக்குச் சுரேஷ் மேலே ரொம்பக் கோபம் கோபமாய் வந்தது. வீட்டில் விருந்தாளிகள் வந்திருந்தனர். பள்ளிக்குப் போகும் அவசரம் வேறு. பெரிய பெண் மங்களாவுக்குக் கால் பரீட்சை; அதனால் அவளுக்கு அவசரம். இன்னும் அந்தத் தடபுடல்களிலேயே சுரேஷினுடைய குறும்புத் தனமும், குறுக்குக் கேள்விகளும்! சாதாரணமாக நான் அவனுடைய குறும்புக் குணத்தையும் குறுக்குக் கேள்விகளையும் பெரிதும் போற்றுவேன், ரசிப்பேன். மேலும் அவனைமட்டும் என்ன, மற்ற எந்தக் குழந்தையையுமே அசட்டை செய்வது, திட்டுவது என்பது என் இயற்கையிலேயே இல்லை. நான் வேலை செய்யும் பாலர் பள்ளியில் உள்ள அந்தச் சின்னஞ் சிறு குழந்தைகளின் 'டியரஸ்ட் பிரெண்ட்' நான்! அப்படி இருந்தும் அன்றைக்கு நான் சுரேஷ்மீது கோபமுற்று அவன் காதுகளைத் திருகி வென்னீர் அறையிலிருந்து தரதரவென்று இழுத்து வெளியே கொண்டு வந்தேன்! காலையில் பால் குடிக்கும்போது பீங்கான் சாஸரை உடைத்து விட்டான். அதோடு நின்றானா? அதை எப்படி மறுபடியும் ஒட்டலாமென்ற ஆராய்ச்சி! அப்புறம் பித்தளை மூடியை தரை மீது நடனமாடவிட்டு அது மட்டும் ஏன் உடையவில்லை என்ற பரிசோதனை! என்னை வேறு கேள்விமேல் கேள்விகள் துளைத்ததுதான் லாபம்! ஒன்றா, இரண்டா? அப்பப்பா! இன்றைக்குத்தான் அவனை எந்தப் பேய் ஆட்கொண்டதோ தெரியவில்லை!

எப்படியோ எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு, அவனையும் கூட அழைத்துக் கொண்டு, பள்ளிக்கு நேரமானதால் சாப்பிடாமலேயே கிடு கிடு என்று நடையைக் கட்டினேன். தினம் வழி நெடுக சுரேஷினுடைய கேள்வி அம்புகள் என்மீது சரமாரியாய்ப் பொழியும். ஆனால் இன்று அவன் அமைதியாகவே இருந்தான். அந்த அமைதி என் மனத்தைக் குத்துவது போன்ற ஓர் உணர்ச்சி. சுரேஷ் முகம் மிகவும் வாடியிருந்தது. தினமும், 'உன் கிளாசுக்குத்தான் வருவேன்' என்று பத்துப் பதினைந்து நிமிஷங்களாவது அடம் பிடிப்பான். ஆனால் இன்று அவன் மறு பேச்சில்லாமல் தன் வகுப்பை நோக்கி நடக்கலானான். நானும், 'இதுவும் நல்லதுக்குதான்! நம்மிடம் கொஞ்சம் பயமாவது வேண்டும் அவனுக்கு'' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டே என் வகுப்பில் நுழைந்தேன்.

ஆனால் மத்தியான்னம் இடைவேளையிலும் சுரேஷ் வழக்கம்போல வந்து என்னை அணைத்துக்கொள்ளவில்லை. அப்பொழுது மட்டும் எனக்கு என்னத்தையோ இழந்து விட்டது போன்ற உணர்ச்சி. 'இத்தனூண்டு சுண்டைக்காய் சுரேஷ், ஆனால் அவனுக்கும் கோபம் வரத்தான் செய்கிறது. ஊம், ஆனால்.. ஆனால் காலையில் நான் செய்ததும் தப்புத்தான்! விருந்தாளிகள், வீட்டு வேலை, பள்ளிக் கூட வேலை இவைகளினால் நான் மிகவும் திண்டாடி விட்டேன்; ஆனால், பாவம்! அதெல்லாம் அவனுக்கு—உலகமறியாப் பாலகனுக்கு - எப்படித் தெரியும்?

எனக்கு இருப்பே கொள்ளவில்லை. வகுப்பில் நுழைந்தேன். ஒவ்வொரு குழந்தையின் முகத்தின் மீதும் எனக்குச் சுரேஷுடைய சித்திரமே காணப்பட்டது. யாருடைய கண்களிலிருந்தோ அவன் சிரித்துக் கொண்டிருந்தான், யாருடைய இளங் கரங்களோ அவன் மாதிரியே விஷமம் பண்ணு



வதில் ஈடுபட்டிருந்தன. அவனுடைய கோபம், அவனுடைய குறும்புத்தனம்—முழு வகுப்பும் சுரேஷ் மயமாயிருந்தது! இன்று அவனுக்கு எத்தனை கோபம்! இந்தக் குழந்தைகளுக்கும் கோபம் வருமோ? மனங்கவரும் புன்னகை பூக்கும் இப்பூக்களினுள் கோபப் பொறி வெளிப்படா விட்டாலும் உள்ளே மறைந்தாவது இருக்கத் தான் இருக்கும். இல்லையா? என்னுடைய இந்தச் சிந்தனைச் சக்கரத்தில் என் இளந்தோழர்களையும் ஈடுபட வைக்க வேண்டுமென்று எண்ணினேன். மறுகணம் அவர்களை, என் மனத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த அதே கேள்வியைக் கேட்டு, அந்த மறைந்திருந்த பொறியை ஊதிவிட்டேன்.

''குழந்தைகளா, உங்களுக்கு எப்பொழுதாவது கோபம் வருவதுண்டோ? (முக்கியமாக அம்மா மீது வருவதுண்டோ என்று அறிய நான் முற்பட் டிருந்தேன்.) நிறைய கோபித்துக் கொள்ளணும், கத்தணும், அடிக்கணும்......'' என் கேள்வி முடிவதற்குள்ளேயே அந்தச் சிறிய கண்கள்—குறும்பு நிறைந்த விழிகள் ஒளிவீசத் தொடங்கி விட்டன. பொறுமை

இழந்து அந்தச் சிறுவர்கள் மிகவும் ஆர்ப்பாட்டத்துடன் தங்கள் தங்கள் கோபத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தனர். ''ஓ வருமே! எனக்கு ரொம்பக் கோபம் வரும் டீச்சர்.''

''அப்படியே மூக்கின் மேலே ஒரு பன்குத்து வைக்கணும் போல் தோணறது.''

''காதை முறுக்கிடணும்!''

''என்ன பண்ணினாலும் தேவலை.'' இது போன்ற பல குரல்கள் மூலைக்கொன்றாகக் கிளம்பின.

நான் அவர்களைச் சாந்தப்படுத்திக் கொண்டு கூறினேன். ''ஊம்! ஒவ்வொருவரும் எனக்கு அவரவர் கோபத்தைச் சொல்லணும். தெரிஞ்சுதா? ஏண்டா அனில் உனக்குக் கோபம் வருமா?'' ஜோரா இஸ்திரி பண்ணின சில்க் ஷர்ட்டும் கருநீல வர்ணக் கம்பளிக் கால் சட்டையும் அணிந்த, செக்கச் செவேலென்று பார்ப்பவர் மனத்தைக் கவரும் அனில் டக்கென்று எழுந்து தன் மழலையில் சொல்ல ஆரம்பித்தான். ''எனக்கு வந்து, இந்த முழு உலகத்திலேயும் என் மம்மி (அம்மா) மீதுதான் ரொம்ப ரொம்ப கோபம் வருது!''

''சீ பாவம்! தினமும் இவ்வளவு ஜோரா 'டிரஸ்' பண்ணிண்டு வருகிறாய். டிபன்லே நல்ல நல்ல பக்ஷணங்களைக் கொண்டு வருகிறாய். இதெல்லாம் உன் மம்மிதானே செய்து தருகிறாள்? அத்தனை பண்ணியும் நீ அவள்மீது கோபப்படறியே?''

''ஐயே! அதெல்லாம் எங்க சீனு மாமாவும், ஆயாவும்தான் செய்கிறார்கள். மம்மி எப்பொழுதும் எங்களை அருகில் அழைப்பது, எடுத்துக்கொள்வது என்பதுகூடக் கிடையாது. எங்களைத் தூங்க வைக்கறதுகூடக் கிடையாது. சினிமாவுக்குக்கூடத் தனியாய் அப்பாவோட போய்விட்டு வருகிறாள். யாராவது வீட்டுக்கு வந்தா மட்டும், 'அனீ, உன்னுடைய அந்தப் பாப்பா பாத்துப் பாடு பாப்போம்....' என்கிறாள். அப்போ மட்டும்தான் அவளுக்கு அனில் ஞாபகம் வருகிறது!''

சொல்லச் சொல்ல அவன் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. அவனை நான் அருகில் அழைத்துத் தட்டிக் கொடுத்துக் கீழே உட்கார வைத்தேன். அப்புறம் சுத்தமான நவநாகரீகச் சொக்காயை அணிந்தவளும், தனது குட்டைப் பின்னல் மீது ரிப்பனில் பெரிய பூவைப் பெருமையாய் கட்டியிருந்தவளும், என்னருகில் உட்கார்ந்தவளுமான உஷாவைக் கேட்டேன்.

''என்ன உஷாதேவியாரே, தங்களுக்கென்ன தோன்றுகிறது?'' சொல்வதற்கு முன்னமேயே உஷாவுக்கு அழுகை பொத்துண்டு வந்தது. ''இல்லே! என் மம்மி (அம்மா) இல்லே! வந்து, எப்பொழுதும் எனக்குப் பிடிக்கிற மாதிரியில் திரட்டிப் பால் பண்ணுவதில்லை. எனக்குப் பிடிக்கிற பின்னல் போடுவதில்லை. தினம் தினம் 'பாலைக் குடி, ரொட்டி சாப்பிடு, வெள்ளை வெளேரென்று சொக்காப் போட்டுக்கோ' என்பா. அப்படியே நன்னா நகத்தாலே அழுத்திக் கிள்ளிடணும் போல....!''

அருகிலிருந்த குமார் உடனே தானாகவே எழுந்து, ''வெறுமே கிள்ளி என்ன பிரயோஜனம்? நன்னா காதைப் பிடிச்சு மூலையிலே ஒரு மணி நேரம் நிக்க வைக்கணும்! இல்லேன்னா என்னா? எங்க அம்மாவுக்கு என்னுடைய எந்தப் 'பிரெண்டும்' பிடிக்கிறதில்லே. இவன் கெட்டவன். அவன் முரடன். இவன் திருட்டுப் பையன், அவன் பிச்சைக்காரப் பயல்; அப்போ என்ன நாங்க சுவரிலேயா முட்டிக்கிறது? கூரையோடேயா பேசறது?'' என்று கேள்விக்குறியுடன் முடித்தான்.

''டேய், நீ பரவாயில்லையே! எங்க அம்மாவுக்கு வீட்டு மனிதர்களே பிடிப்பதில்லை. என் பாட்டி எத்தனை நல்லவள், தெரியுமா? நல்ல நல்ல கதை சொல்லுவாள். தினமும் கற்கண்டு கொடுப்பாள். ஆனால் அம்மா மாத்திரம் அடிக்கடி

அவளைக் கோபித்துக் கொள்கிறாள், முணுமுணுக்கிறாள்.'' ரமேஷ் சொன்னான்.

''எங்க அம்மா என்ன நினைக்கிறாள் தெரியுமா? நான் ஒரு கல்லுப் பிள்ளையாராம்! எப்பப் பார்த்தாலும் பிறத்தியாரிடம் சொல்லிண்டே இருப்பாள் - 'இவன் இத்தனை பெரிய கழுதையாய் வளர்ந்திருக்கானே; ஆனால் ஒண்ணும் தெரியறதில்லே. எங்க சரோஜா இருக்காளே, எத்தனை கெட்டிக்காரி!' ஆனால் அக்காவுக்கு - அக்காவாம் பொக்கா - கில்லி ஆடத்தெரியுமான்னு நான் கேக்கறேன்! பம்பரம் சுத்தவாவது தெரியுமா? 'டீல்'னு என்னவிலேன்னு கேட்பாள். இந்த லச்சணத்திற்குக் கெட்டிக்காரியாம் கெட்டிக்காரி!'' தினகரன் தன்னுடைய அறிவையும். திறமையையும் வெளிப்படுத்தினான்.

எதிலிருந்து ரொம்பத் தூரம் ஓடுகிறோமோ - அதுவே மறுபடியும், மறுபடியும் முன்னாலே வந்து, தடுத்து நின்று, வழி மறைப்பது போன்ற நிலையில் நான் இருந்தேன். சுரேஷுக்கும் இப்படித்தானே தோன்றும். ''அம்மாவை நன்றாகப் உதைச்சிப்பிடணும்..!'' அவனுடைய அந்தக் கோபமே என் கண் முன்னே பலூன் மாதிரி பெரிதாக உப்பிக்கொண்டிருந்தது. என் மனம் குழம்பியது. குழந்தைகளை நோக்கிக் கேட்டேன். ''எல்லோருடைய அம்மாவும் ரொம்ப கெட்டவர்கள். நிஜந்தானே?'' எல்லோரும் இதைத்தானா சொல்ல வேண்டும்?......

''வேறொன்றுமில்லை?''

மூலையிலிருந்து அசோகன் எழுந்து நின்றான். ரொம்ப அடக்கமான கெட்டிக்காரப் பையன் அவன். ''டீச்சர், எனக்குக் கோபமே வருவதில்லை. என்னுடைய அம்மாமேலே கொஞ்சங்கூட வருவதேயில்லை!'' என்று ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னான் அவன்.

''உங்க அம்மா உன்னை அடிக்கிறதில்லை? கோபிக்கிறதில்லை!'' என்று உடனே ரமேஷ் அவனைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டான்.

''ஊஹூம். என் அம்மா எப்போதும் என்னைக் கோபிப்பதில்லை. என்னை அடிக்கிறதுகூடக் கிடையாது. எப்பொழுதும் அவள் சிரிக்கிறாள்: அவள் யாருடனும் பேசுவதில்லை. ஆனால் நான் அவளோடே ரொம்பப் பேசுவேன். அவள் அதைக் கேட்டுச் சிரிப்பாள்.''

''நிஜமாவா? ஒரு அம்மாவாவது உலகில் நல்லவளாக இருக்கிறாளா, அப்படின்னா?'' நான் ரொம்ப உத்சாகத்தோடு அசோக்கிடம் கூறினேன். ''அசோக், உன் அம்மாவை நான் கட்டாயம் சந்தித்துப் பேச வேண்டும்.''

அசோகன் தன்னுடைய பெரிய அழகிய கருவிழிகளை உருட்டி என்னைப் பார்க்க ஆரம்பித்தான். பிறகு மெதுவாகப் பேசலானான். ''டீச்சர், வந்து... எங்க அப்பா சொல்றார், அம்மா சாமிகிட்டே போயிட்டாள்னு; அத்தை சொல்றாள், அவள் செத்துப் போயிட்டாள்னு. ஆனால் அவள் போட்டோவில் இருக்காள்; படத்தில் இருக்காள்! எங்க வீட்டிலேயே எங்கிட்டேயே இருக்காள்! நான் அவளுக்கு எல்லாவற்றையும் சொல்கிறேன். அவள் சிரிக்கிறாள்! எப்பொழுதும் சரி; கோபிப்பதேயில்லை. அடிக்கிறதேயில்லை. ரொம்ப ரொம்ப ரொம்....ப நல்லவள் அவள்.''

அந்தக் கள்ளங் கபடமற்ற சிறுவனை நான் அன்பொழுக அணைத்துக்கொண்டு கண்ணீர் வழியும் நயனங்களுடன் ஒப்புக்கொண்டேன். ''ஆம்! அசோகனின் அம்மா ரொம்ப நல்லவள். அசோகனும் ரொம்ப நல்லவன்தான்!''

211803

நீரில் வாழும் குதிரை

மிதுனம்

மனிதன் ஏறிச் சவாரி செய்யாத ஒரு குதிரை இருக்கிறது! இது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். ஆனால், உண்மையில் இந்தக் குதிரை இனம் மட்டும் மனிதனுக்கு இதுவரை அடிமையாகவில்லை! அதுதான் நீர்க் குதிரை!

தண்ணீரில் வாழ்ந்துவரும் இந்த ஜீவராசிக்கு நீர்க் குதிரை என்று பெயர் வந்ததன் காரணம் என்ன தெரியுமா? உருவத்தில் ஓரளவு குதிரையைப்போலவும், ஆனால் தரையில் விழாமல் தண்ணீரிலேயே வாழ்ந்து வருவதாலும் இதற்கு 'நீர்க் குதிரை' என்று பெயர் வந்தது.

நீர்க் குதிரை மீன் இனத்தைச் சேர்ந்த ஜீவராசி. முழு வளர்ச்சியடைந்த ஒரு நீர்க் குதிரை நான்கு அங்குல நீள உடலமைப்பைப் பெற்றிருக்கும்.

மீன் இனத்தைச் சேர்ந்த நீர்க் குதிரைக்கு, மீன்களுக்கில்லாத சில விசேஷத் தன்மைகள் உண்டு. நெடுங்குத்தலாக (அதாவது நீரினுள் ஓர் அம்பை எய்தினால் எவ்வாறு செல்லுமோ அதைப் போல) நீந்தும் சக்தி உண்டு. நீரில் நாம் தரையில் எவ்வாறு நிற்கிறோமோ அதைப்போல் நிற்கும் சக்தி இதற்கு உண்டு. இவ்வாறு இந்தக் குதிரை தன் உடலைத் தாங்கிக்கொள்ளும்படி இதன் வால் உறுதியாகவும் இதன் உடலை நேர் நிலையில் தாங்கும் சக்தி பெற்றதாகவும் அமைந்திருக்கிறது.

அடுத்தபடியாக இதன் அதிசயத் தன்மையைக் கவனிப்போம். பச்சோந்தியைப்பற்றி நமக்குத் தெரியும். நிறத்திற்கு நிறம் மாறும் பச்சோந்தியை நாம் சில சமயம் மனிதர்களைக் குறிப்பிடும்போதும் சொல்வதுண்டு. அதாவது நிலையான கொள்கை இல்லாமல், ஆளுக்குத் தகுந்தபடி சமயம்போல் பேசி, எல்லோருக்கும் நல்லவராக வாழ முயல்பவர்களைக் கண்டால் 'பச்சோந்தி நிறத்தை மாற்றுவது போல் இவன் பேச்சை மாற்றுகிறானே!' என்கிறோம். தன் சூழ்நிலைக்கு ஏற்றபடி தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் தன்மை பச்சோந்திக்கு இருப்பதால் அதை, அதன் எதிரிகள் இலகுவில் கண்டு கொள்ள முடியாது. அதேபோல் நீரினுள் வாழும் இந்த நீர்க் குதிரை நீரிலுள்ள பலவர்ண புல், பூண்டுகளின் நிறத்திற்கேற்றவாறு தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் சக்தி பெற்றுள்ளது. ஆகவே, இதை ஆகாரமாகக் கொள்ளவரும் பெரிய மீன்கள், இலகுவில் இதைக் கண்டு பிடிக்க இயலாமல் அடிக்கடி நீரின் அடியிலுள்ள தாவரங்களைப் பற்றிக் கொண்டு இதை நழுவவிட்டு விடுகின்றன.

நீர்க் குதிரையினுடைய கண்களின் அமைப்பு இன்னும் நமக்கு விந்தையை அளிக்கும்.

நம் கண் விழிகள் ஒரே சமயத்தில் இரண்டும் இயங்கும் சக்தி வாய்ந்தவை. ஒரு பொருளைப் பார்க்கும்போது நாம் இருவிழிகளைக்கொண்டே பொருளை இன்னதென்று அறிகிறோம். ஆனால் நீர்க் குதிரையின் விசித்திரக் கண்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே இயங்கக் கூடியவை. கூர்மையான பார்வை பெற்ற இதன் விழிகளில் ஒன்று முன்புறமுள்ள பொருளையும் அதே சமயத்தில் மற்றொன்று வேறு ஒரு பொருளையும் கண்டறியும் சக்தி பெற்றது. ஆகவே நீர்க் குதிரை ஒரே சமயத்தில் முன், பின் புறங்களிலும் பார்க்க முடிகிறது. தவிர, பக்கவாட்டங்களிலும் பார்க்க இதனால் முடியும். ஆகவே, இது தன் எதிரிகளிடமிருந்து வெகு சுலபமாகத் தப்பிவிடுவதில் ஆச்சரியமில்லை.

நீர்க் குதிரைக்கு வாயில் பற்கள் கிடையாது. ஆனால் பொக்கை வாய்க் கிழவிபோல் ஆகாரம் உட்கொள்ள இது அவதிப்படுவதில்லை. குழாய் போன்ற இதன் வாயமைப்பு, இதன் ஆகாரத்தை நன்ருக உறிஞ்சி, பசி தீர்க்கும் சக்தி பெற்றுள்ளது. உயிருடனிருக்கும் நீர் வாழ் பிராணிகளையே இது ஆகாரமாகக் கொள்ளுகிறது. தன் இரையை வாயில் பற்றி, வெகு விரைவில் அதை உறிஞ்சி, சத்துப் பொருளை உட்கொண்டு சக்கையை எறிந்துவிடும் சக்தி நீர்க் குதிரைக்கு உண்டு.

நீர்க் குதிரையின் உடல் காற்றடைக்கப்பட்ட ஒரு 'பிளாடர்' (bladder) போன்றது. ஆகவே இதன் உடலில் ஏதாவது கூருன பொருள் தாக்கி, துவாரம் ஏற்பட்டு விட்டால் இந்த அதிசயக் குதிரை நீரின் அடியில் மூழ்கிவிடும். ஆகவே மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது மட்டும் ஆபத்தல்ல! உயிருள்ள இந்த நீர்க் குதிரையும் 'பஞ்ச்சர்' ஆகிவிட்டால் நீரினுள் மூழ்கிவிடும்.

இதன் உடலிலுள்ள துவாரம் மிகப் பெரிதாக இருந்து குணமாக 48 மணி நேரத்திற்கு மேலாகி விட்டால் குதிரை 'அவுட்' ஆகிவிடும்! 48 மணி நேரத்திற்குள் குணமாகிவிட்டால் நீர்க் குதிரை மெதுவாக நீரின் மேல் தளத்திற்கு வந்து உயிர் வாழும்.

நீர்க்குதிரை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சேர்ந்ததே. ஆனால், அதிலும் இந்த ஜீவராசி ஓர் அதிசயத்தைச் செய்து வருகிறது. பெண் குதிரை முட்டையிடும் பருவத்தில் நீரில் மிதந்தபடி இருக்கும். ஆண் குதிரைகள் ஆகாரத்திற்காக அலைந்து திரியும்போது அவற்றின் வயிற்றிலுள்ள தோல் பையினுள் இந்த முட்டைகள் புகுந்துவிடும். இந்தப் பை, கங்காருவின் வயிற்றிலுள்ள பையைப்போல் அமைந்துள்ளது, முட்டைகளை அடை காத்தபின் உரிய காலத்தில் குட்டிகள் ஆண் நீர்க்குதிரையின் வயிற்றிலிருந்து வெளிவரும்.

'பத்து மாதம் சுமந்து பெற்றவள் தாய்' என்கிருேம் நாம்.

ஆனால் இந்தச் 'சுமக்கும் தண்டனை' நீர்க் குதிரை இனத்தில் தகப்பனையே சேர்ந்துள்ள விந்தையை என்ன என்பது?

'முட்டையிடும்' ஆண் குதிரையைப் பரீட்சித்த வில்லியம் பீபீ என்பவர், "ஆண் நீர்க் குதிரை முட்டையைச் சுமந்து செல்லும்போது குஞ்சுகள் வெளிவரும் சமயம் என்பதை உணர்ந்துகொண்டால் தன் உடலை வளைப்பதைக் கண்ட மற்ற நீர்க் குதிரைகள் உதவிக்கு ஓடோடியும் வந்து அதன் உடலைத் தங்கள் உடலிலுள்ள வால் பகுதியினால் இணைத்து லேசாக அமுக்கும். அப்போது அதன் வயிற்றிலுள்ள முட்டைகளிலுள்ள குஞ்சுகள் மளமளவென்று வெளிவர ஆரம்பிக்கும். ஆண் குதிரை படும் இந்தப் பிரசவ வேதனைக்கு மருத்துவம் செய்ய வரும் அதே இன ஜீவராசிகளின் குணுதிசயத்தைப் பாருங்கள்! ஒரு தடவைக்குச் சுமார் முந்நூற்றுக்கு மேற்பட்ட குட்டிகள் வெளிவரும்" என்கிருர்.

நீர்க் குதிரையின் இத்தகைய அதிசய வாழ்க்கைச் சரித்திரம் நமக்கு விந்தையை ஊட்டுகிறது! இதைப்போல் நீர்வாழ் ஜீவராசிகள் எவ்வளவோ உள்ளன! அவற்றின் மர்மம் நிறைந்த வாழ்வைப் பற்றி எவ்வளவோ அதிசய உண்மைகளை நிலம் வாழ் ஜீவராசிகளான நாம் தெரிந்துகொள்ளலாம்!

உனக்குத் தெரியுமா?

1. பலகை அறுத்தல்

ஒரு மரப்பலகையைச் சரிபாதி அளவுள்ள இரண்டு துண்டுகளாக அறுக்க எனக்கு ஒரு நிமிஷம் ஆகிறது; அதே அளவுள்ள மற்ருெரு பலகையைச் சரி அளவுள்ள நான்கு துண்டுகளாக அறுக்க எனக்கு எத்தனை நிமிஷங்கள் ஆகும்?

2. ஜனுதிபதியாக

ஒருவர் ஜனுதிபதியாக வரவேண்டுமானுல் பொதுவாகச் சில நிபந்தனைகள் உண்டு.

1. அவர் இந்த நாட்டுப் பிரஜையாக இருக்கவேண்டும்;

2. குறைந்தது முப்பத்தைந்து வயது ஆனவராக இருக்கவேண்டும்;

3. பதிநான்கு ஆண்டுகளுக்குமேல் இதே நாட்டில் வசிப்பவராக இருக்கவேண்டும். இவையனைத்தும் இருந்தும் மிக முக்கியமான நிபந்தனை ஒன்று உண்டு. அதை நீ சொல், பார்க்கலாம்;

விடை:

1. மூன்று நிமிஷங்கள். (நான்கு துண்டுகளாக்க மூன்று தடவை அறுத்தால் போதும்).

2. முக்கியமாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

ஸ்ரீமான் கௌடபாதம் இரைக்க இரைக்க நடையும் ஓட்டமுமாகச் சென்றுகொண்டிருந்தார். தம் இரட்டை நாடிச் சரீரத்தைச் சிரமத்தோடு சுமந்து சென்றுகொண்டிருந்த அவருடைய வலது கையில் நல்ல பழுத்த வாழைத்தாறு ஒன்று தொங்கியது. அவரைத் தொடர்ந்தாற்போல் வேலைக்காரன் ஒருவன் பெட்டி, படுக்கையைத் தலையில் தூக்கிக்கொண்டு சென்றான். அடிக்கொரு தரம் கையில் கனத்த வாழைத் தாற்றைக் கீழே வைத்து, கை மாற்றிக்கொண்டு தாற்றின் பிடியைப் பிடித்துப் பிடித்து வலித்த கையை மூடித் திறந்து தெம்பு ஏற்றிக்கொண்டு நடக்கலானார்.

தூரத்தே பாலத்தின்மீது ஓடின ரெயில் எழுப்பிய ஓசையைக் கேட்டதும், கைக் கனத்தைப் பொருட்படுத்தாது ஓடலானார்.

''கோவிந்தா, வேகமாக நட. இல்லையோ வண்டி 'கோயிந்தா' ஆயிடும்'' என்று உடன் வந்த வேலைக்காரனிடம் கூறி அவனையும் துரிதப்படுத்தினார்.

கொஞ்சதூரம் சென்றதும், பார்வைத் தூரத்தில் இருந்த 'டோல் கேட்' சாத்தியிருப்பதைப் பார்த்தார். அதை அவர் பார்த்ததும், சாத்தியிருந்த 'கேட்'டிற்குள் ரெயில் வண்டி வேகமாக ஓடினதும் சரியாக இருந்தது.

கேட்டைத் தாண்டிவிட்ட ரெயிலைக் கோட்டை விட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு ஒரு புது வேகத்துடன் ஓடவாரம்பித்தார். வேலைக்காரனும், அவரைப் பின் தொடர்ந்தான்.

கௌடபாதம் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, கையிலிருந்த வாழைத் தாற்றைக் கீழே வைத்துவிட்டு அவசர அவசரமாகப் பையிலிருந்து பணத்தை எடுத்துத் தாம் போக வேண்டிய இடத்திற்கு டிக்கெட் வாங்கினார். அவர் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு பிளாட்பாரத்திற்குள் நுழையும்போது, வேண்டுமென்றே செய்ததுபோல் வண்டி

யின் கார்டு விசில் அடித்து,பச்சைக் கொடி காட்டிவிட்டார்.

கௌடபாதம், ரெயிலில் ஏருமல் விடுவதில்லை என்று தீர்மானித்த வர்போல் ஓடும் ரெயிலின் உள்ளே பழத் தாற்றைத் தூக்கி எறிந்து விட்டு, தாமும் தாவி ஏறிக்கொண்டார். வேலைக்காரன் தன் தலையிலிருந்த பெட்டி படுக்கையை உள்ளே விசிறித் தள்ளினுன். கௌடபாதம் பையில் கையைவிட்டு அகப்பட்ட நாணயத்தை எடுத்து வேலைக்காரனை நோக்கி வீசியெறிந்தார்.

கௌடபாதத்தின் அதிருஷ்டமோ என்னவோ, அவர் ஏறின பெட்டியில் அதிகக் கூட்டமில்லை. பெஞ்சுக்கு மேலிருந்த தட்டில் காலியான இடத்தில் பெட்டி, படுக்கையையும் வாழைத் தாற்றையும் அடக்கமாக வைத்துவிட்டு வசதியாக ஜன்னலருகே மேல் துண்டை உதறிப்போட்டு உட்கார்ந்தார்.

வண்டி உத்தமர்கோயிலில் நின்றுவிட்டுக் கிளம்பியது. வண்டி கிளம்பின பிறகு ஏறுவதற்காகக் காத்திருந்த வெள்ளை உடுப்புக்கார உத்தியோகஸ்தர் வண்டியில் தொத்திக்கொண்டார்.

டிக்கெட் பரிசோதகர் ஒவ்வொருவராகப் பரிசோதித்துவிட்டு, கௌடபாதத்திடம் நெருங்கினுர். பரிசோதகர் கேட்பதற்கு முன்னரே தம் டிக்கெட்டை எடுத்து அவரிடம் நீட்டினுர் கௌடபாதம். டிக்கெட்டைப் பரிசோதித்துச் சிவப்புக் கோடு கிழித்துவிட்டு, அதைத் திரும்பக்கொடுத்தார் பரிசோதகர்.

முன் தலையில் அரும்பி இருந்த வியர்வையை துடைத்துக்கொள்ளத் தலையில் இருந்த தொப்பியைக் கழற்றி மேல்தட்டில் வைத்தார். அப்போது பெட்டி படுக்கையின் அருகில் இருந்த வாழைத்தாறு பரிசோதகர் கண்ணில் பட்டது. உடனே, ''யாருடையது, இந்தப் பழத்தாறு?'' என்று கேட்டார்.

''என்னுடையதுதான்'' என்ருர் கௌடபாதம்.

''லக்கேஜு சார்ஜ் கொடுத்தீர்களா? எங்கே, ரசீதைக் காட்டுங்கள், பார்ப்போம்.''

''பழத்தாற்றுக்குக்கூட லக்கேஜ் சார்ஜா?''

''ஏன், அது லக்கேஜில் சேர்த்தியில்லையோ? அதற்கு நிறை கிடையாதோ?''

''அப்படியில்லை....''

''பின் எப்படி? ஹூம்; ஒரு ரூபாய் எடுங்கள். ரசீது போட்டுத் தருகிறேன்.''

''என்ன, ஒரு ரூபாயா? சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம் என்பதுபோல் அல்லவா இருக்கிறது! இந்தத் தாற்றுக்கு ஐந்தணுதான் நான் எண்ணிக்கொடுத்தேன்!''

''ஐந்தணு கொடுத்தீர்களோ, ஐந்து காசு கொடுத்தீர்களோ, இல்லை, எங்கிருந்தாவது அபேஸ்தான் பண்ணினீர்களோ, எங்களுக்கு அக்கறையில்லை. ரெயிலில் எடுத்துச் செல்வதற்குச் சார்ஜ் கொடுங்கள்; அது போதும்.''

''ரெயில்வே ரூல்ஸ் எனக்குத் தெரியாமல் இல்லை. பழங்களுக்கு லக்கேஜ் கிடையாது. அதைத் தவிர, என் டிக்கெட்டுக்கு உண்டான லக்கேஜைத்தான் நான் எடுத்து வந்திருக்கிறேன்.''

''உங்கள் டிக்கெட்டுக்கு உண்டான நிறை பெட்டி படுக்கைதான். வாழைத்தாற்றுக்கான லக்கேஜ் சார்ஜ்தான் ஒரு ரூபாய். ஹூம், பணத்தை எடுங்கள்.''

''அதெப்படி, ஒரு ரூபாய் என்று கணக்காய்ச் சொல்கிறீர்கள்? குத்து மதிப்பா? நீங்கள் சட்டம் பேசுகிறீர்களே, அதுபோல் வாழைத்தாற்றை நிறுத்து, அதிக எடைக்கான சார்ஜைத்தான் நான் தருவேன்.''

''இப்போது எப்படி நிறுப்பது? ரெயில்வேயில் எங்கள்கூடவே எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய அளவுக் கருவியை எங்களுக்கு விநியோகம் செய்யவில்லை. நீங்கள் வேண்டுமானுல் எழுதிப் போடுங்கள்.''

''அதற்காக என்னைக் கூடுதலான சார்ஜைத் தரச்சொல்கிறீர்களா?''

''சரி, நீங்கள் கூடுதலாக ஒன்றும் தரவேண்டாம். நிறைக்கானதைக் கொடுத்தால் போதும்.வரும் ஸ்டேஷனில் இறங்கி வாழைத் தாற்றை நிறுத்து நிறைக்கான ரசீது போட்டுத் தருகிறேன். இந்த

வண்டியைத் தவறவிடலாம்: மூன்று மணி நேரம் கழித்துவரும் அடுத்த வண்டியில் போகலாம்.''

''என்னது....?''

''ஆமாம். இல்லையென்றால் நான் சொல்கிறபடி ஒரு ரூபாய் கொடுத்து ரசீது வாங்கிக்கொள்ளுங்கள். இந்த வண்டியிலேயே ஹாய்யாகப் போங்கள்.''

கௌடபாதம் ஒரு கணம் யோசித்தார். 'இதேதடா வம்பு?' என்று கலங்கினார். பிறகு, என்ன நினைத்தாரோ, ''அடுத்த ஸ்டேஷன் வரட்டும். நான் இறங்குகிறேன். வாழைத்தாற்றை நிறுத்து அதற்கான பணத்தைத் தருகிறேன். இந்த வண்டி தவறினால் பாதகமில்லை. எனக்கு அவசரம் எதுவுமில்லை. அடுத்த வண்டியில் வருகிறேன்'' என்றார்.

''அப்படியா, சரி, அடுத்த ஸ்டேஷன் வந்ததும் நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் பரிசோதகர் அடுத்த பெட்டிக்குக் கீழே விழாமல் ஜாக்கிரதையாகத் தாவிப்போனார்.

அடுத்த பெட்டிக்குள் சௌக்கியமாய்ப் பரிசோதகர் போய்விட்டாரா, இல்லையா என்பதை ஜன்னல் வெளியே தலை நீட்டிப் பார்த்துத் தீர்மானம் செய்துகொண்டார் கௌடபாதம். உடனே தன் ஆசனம் விட்டெழுந்து, மேல்தட்டிலிருந்த சீப்புகளிலிருந்து பழங்களை உருவிப் பெட்டியில் உட்கார்ந்திருந்த பிரயாணிகளுக்கு உதார குணத்துடன் வழங்கினார்.

''சாப்பிடுங்கள். ருசித்துச் சாப்பிடுங்கள்'' என்று கூறிவிட்டுத் தாமும் ஐந்தாறு பழங்களைச் சாப்பிட்டார். பிரயாணிகளுக்கு அவருடைய செய்கை ஆச்சரியத்தை உண்டாக்கியது. என்றாலும் அவர் தந்த பழங்களை வாங்கி, உரித்து, ருசித்துச் சாப்பிட்டார்கள்.

''நல்ல இனிப்பு!'' என்றார் ரசிகர் ஒருவர்.

''தஞ்சாவூர் ரஸ்தாளி என்றால் கேட்கவேண்டுமா?'' என்றார் மற்றொருவர்.

குலுங்கக் குலுங்கப் பழமாகத் தொங்கின தாறு பச்சைக் கம்பாக மாறிவிட்டது. தாற்றில் மிஞ்சின தண்டை, ஜாலவித்தைக்காரனின் மந்திரக்கோல்போல், ஜாக்கிரதையாக எடுத்து மேல்தட்டில் படுக்க வைத்தார்.

வேகமாக ஓடிக்கொண்டிருந்த வண்டியின் வேகம் குறைந்தது, அடுத்த ஸ்டேஷன் அருகில் வந்துவிட்டதைத் தெரிவித்தது.

ஸ்டேஷனில் வண்டி நின்றவுடன் வண்டி நிற்பதற்காகக் காத்திருந்த பரிசோதகர், கௌடபாதம் இருந்த பெட்டிக்குக் கனவேகமாய் வந்து, ''ஹூம், தாற்றை இறக்குங்கள், நிறுக்கலாம்'' என்றார்.

''தாறா? என்னிடம் என் டிக்கெட்டுக்குச் சரியாகத்தான் லக்கேஜு இருக்கிறது. அதிகப்படியான லக்கேஜு கிடையாது'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் கௌடபாதம்.

''என்ன....?'' என்று கேட்டுக்கொண்டே பெட்டிக்குள் ஏறி வந்தார் பரிசோதகர்.

''வாழைப்பழத் தாறு எங்கே? அதை நிறுக்கவேண்டும்'' என்று பறந்தார் பரிசோதகர்.

''இதோ இருக்கிறது. இந்தாருங்கள்'' என்று தாற்றின் தண்டை நீட்டினார் கௌடபாதம்.

''இதிலிருந்த பழங்கள்....?''

''என் வயிற்றுக்குள்ளும், இதோ இருக்கும் மற்ற பிரயாணிகள் வயிற்றுக்குள்ளும் இருக்கின்றன. எங்களை வேண்டுமானால் நிறுங்கள்'' என்று அமைதியாகக் கூறினார் கௌடபாதம். அவர் சொன்னதைக் கேட்டதும் பெட்டியிலிருந்த ஜனங்கள் வாய்விட்டுக் கொல்லென்று சிரித்தனர். கௌடபாதம் செய்த காரியத்தைப் புரிந்துகொண்ட பரிசோதகர் முகத்தில் ஈயாடவில்லை. பதில் பேச வக்கில்லாது பெட்டியிலிருந்து கீழே இறங்கிப் போனார்.

தேன் ஜாடிகள்

அரேபிய நாட்டுத் தேன் வியாபாரி ஒருவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர் மூன்று பிள்ளைகளிடத்திலும் சமமான அன்பு கொண்டிருந்தார். எந்தச் சாமான் வாங்கினாலும் பிள்ளைகளிடையே பூசல்கள் ஏற்படாவண்ணம் ஒரே மாதிரியாக மூன்று வாங்குவது வழக்கம்.

அவர் இறந்ததும் சொத்துக்களையெல்லாம் சமமாகப் பங்கு பிரித்துக்கொண்டார்கள். கடைசியில் தேன் ஜாடிகள் மட்டும் 21 ஜாடிகள் இருந்தன. அவற்றில், ஏழு ஜாடிகள் நிறையவும் ஏழு ஜாடிகள் பாதி அளவு மற்ற ஏழும் காலியாகவும் இருந்தன. தேனை அளந்து காலி ஜாடிகளில் மாற்றினால் சேதம் ஏற்படும் என்று எண்ணி, மூன்று பேரும் அப்படியே தேன் சமமாகவும், ஜாடிகளும் சமமாகவும் இருக்கும்படி பங்கு பிரித்துக்கொள்ள விரும்பினார்கள். ஊர்ப் பஞ்சாயத்துக்காரர்களும் அப்படியே செய்தனர். ஒவ்வொருவருக்கும் எந்த எந்த அளவுகளில் எத்தனை ஜாடிகள் கிடைத்தன?

விடை: 36-ஆவது பக்கம்,

சந்நியாசி

'சுகி'

[மன்னர் பெருமை மடையர் அறிவரோ - என்று நளவெண்பாவில் ஒரு கட்டம் வருகிறது. மாறுவேடத்தில் சமையல்காரனாகவிருக்கும் தம் தகப்பனாரை அறியாத நள மகாராஜனின் பிள்ளைகள், ''சமையல்காரா, மன்னர் பெருமை உனக்குத் தெரியாது'' என்று சொல்லுகின்றனர். இதற்கு உபகதையாக என்னுடைய தமிழ் ஆசிரியர், ''மன்னர் பெருமை மட்டுமல்ல, சந்நியாசியின் பெருமையும் ஒரு சமையல்காரனுக்குத் தெரியாது'' என்று கீழ்க்கண்ட கதையைச் சொன்னார்.]

''அம்மா, உனக்கு இனிமேல் கவலை இல்லை. இதோ பார், சரியான ஆள் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றார் சந்நியாசி.

அவருடைய தாயார் வெளியே வந்து பார்த்தாள். தன்னுடைய மகனைப்போல வயதுள்ள ஒரு வாலிபன் நின்றுகொண்டிருந்தான்.

''இது என் தாயார். இவளுக்குச் சமையலில் ஒத்தாசை செய்ய வேண்டும். என் வீட்டில் அடியார்களுக்கும் பக்தர்களுக்கும் சில சமயம் படையல் உண்டு. அதற்கு உதவி செய்யவேண்டும்.''

சமையல்காரன் தலையை அசைத்தான். சாமியார் வீட்டிலே சாப்பாடு கிடைக்கும்; அதிகமான வேலையும் இருக்காது என்பதால் ஒப்புக்கொண்டான். அந்தச் சந்நியாசி இளம் வயதுள்ளவர்; சிறந்த பக்திமான்; எப்போதும் சாஸ்திரங்கள். வேதங்கள், பக்திப் பாடல்கள் படித்துக்கொண்டிருப்பார். அல்லது சொல்லிக்கொண்டிருப்பார். அவருடைய பேச்சுக்கும், பக்திக்கும் அந்த ஊரில் நல்ல மதிப்பு. அவருடைய தேவை அறிந்து இளகிய மனமுடைய அன்பர்கள் வேண்டுவன கொடுப்பார்கள்.

அன்றாடம் சந்நியாசி பூஜையில் அமர்ந்தால் மனம்விட்டுப் பாடுவார். சில சமயம் மணிக்கணக்காக இருப்பார். சில சமயம் போனோம் வந்தோம் என்று வந்து

விடுவார். அவருடைய சத்-பிரசங்கத்தைக் கேட்கச் சமையல் ஆளும் போவான். அவனுக்கு ஞாபகசக்தி அதிகம். அவர் சொல்லுவதை எல்லாம் போட்டோ எடுக்கிற மாதிரி மனம் எடுத்துக்கொள்ளும்.

சில சமயம் சந்நியாசி வர நேரம் ஆகும். அவர் தாயார், ''நீதான் பூஜை செய்யேன்'' என்பாள்.

சமையல்காரன், தான் கேட்ட சுலோகங்கள், பாடல்களைச் சொல்லிப் பூஜை செய்வான். இதிலே ஒரு ரகசியம் என்னவென்றால், அவன் என்றைக்கும் பூஜை செய்தால் அது கணக்காக ஒரு குறிப்பிட்ட நாழிகை நேரம்தான் நடக்கும்.

''என்னம்மா, அதற்குள் பூஜை முடிந்துவிட்டதா?'' என்று கேட்பார் சந்நியாசி. சமையல்காரனுக்குக் கோபம் வரும்.

ஒரு நாள் பக்தர்களுக்கு விருந்து ஏற்பாடு ஆகியிருந்தது. அந்தச் சமயம் வீட்டிலே பொருள் ஏதோ ஒன்று இல்லாததால் வாங்கிவர சந்நியாசி கடைத் தெருவுக்குப் போயிருந்தார். நேரம் ஆகிவிடவே, ''நீயே பூஜை செய்'' என்று சொல்லவும், சமையல்காரன் பூஜை செய்தான். அன்று பக்த கோடிகள் பலர் இருந்தார்கள். சந்நியாசி வந்தவுடன் பூஜை விரைவில் முடிந்ததைக் கண்டார். ''ஏனம்மா, அதற்குள் பூஜை முடிந்துவிட்டதா?'' என்றார்.

பலர் முன்னிலையில் தன்னை அவமானம் செய்துவிட்டதாக, வீட்டு அம்மாளிடம் கோபமாகச் சொன்னான் சமையல்காரன்.

''இனிமேல் அவ்வாறு சொல்ல மாட்டான்'' என்று ஆறுதல் சொன்னாள் சந்நியாசியின் தாய்.

அதற்கு அடுத்த நாள், சந்நியாசி பூஜை செய்துகொண்டிருந்தார். ஆனால் ஒரு நாழிகைகூட இல்லை. அதற்குள் எழுந்து வந்துவிட்டார். சமையல்காரனுக்குச் சரியான சந்தர்ப்பம்.

''ஏனம்மா, இன்று அவர் மட்டும் உடனே வந்துவிட்டார். நான் நேற்று அதிக நேரம் பூஜை செய்தேனே!'' என்றான்.

''சரி. நீ சும்மா இரு'' என்று சமாதானம் சொன்னாள்.

அடுத்த மாதம், ஒரு நாள் பௌர்ணமி தினம் வந்தது. பௌர்ணமி தோறும் அவர்கள் வீட்டிலே உபந்நியாசம், பூஜை உண்டு. அதற்கு பக்தகோடிகள் வருவார்கள். அன்று சமையல் திட்டமும் வெகு ஜோராக இருக்கும்.

''நீயே பூஜை செய்'' என்றார் சந்நியாசி.

சமையல்காரன் பூஜை செய்ய ஆரம்பித்தான். அவனுக்கு மனப்பாடமுள்ள ஸ்தோத்திரங்கள் பல சொன்னான். ஒவ்வொன்றிலும் அவனுக்கு நினைவுள்ளதைச் சொல்லிவந்தான்.

''கிளிப்பிள்ளைபோல ஒரேமாதிரி சொல்லுகிறாய். மாற்றமே கிடையாதா?'' என்றார் சந்நியாசி.

சமையல்காரனுக்குக் கோபம். பெரியம்மாளைப் பார்த்தான்.

''அவனுக்குத் தெரிந்ததைத்தான் சொல்லுவான்'' என்று சமாதானம் சொன்னாள். உடனே தாயாருக்குக் கொடுத்த வாக்கு நினைவில் வந்தது. இனிமேல் சமையல்காரன் பூஜை செய்வதைக் குறை கூறுவதில்லை என்று ஒப்புக்கொண்டார் அவர்.

அன்று சொன்னால் என்ன?

பின்னரும் ஒரு சில சம்பவங்களில் குறை சொல்லும்படி நேர்ந்துவிட்டது.

''நான் யந்திரம்போல் பூஜை செய்கிறேனாம். அவர் வேண்டுமென்றால் ஒரு நாழிகையில் முடிக்கிறார். அல்லது ஒரு விநாடியிலும் முடிக்கலாமா?'' என்று கேட்டான்.

''உன் கேள்வி உண்மையானது. அவன் பக்தி உனக்குத் தெரியாது.''

''வீட்டுக்கு எஜமானர். அது சரி. பக்தி என்றால் அதில் கூடவா உயர்வு தாழ்வு?''

சமையல்காரன் இந்த மாதிரி கேட்டது தாய்க்கு வருத்தம். ஆனாலும் கோபங்கொள்ளாமல் இருந்தாள்.

பௌர்ணமி அல்லவா? அன்று அவர்கள் வீட்டிலே நிறையக் கூட்டம்.

''நீயும் உட்கார். நானே பரிமாறுகிறேன்'' என்றாள் தாய்.

சமையல்காரன் சந்நியாசிக்கு அருகில் அமர்ந்தான்.

எல்லோருக்கும் பரிமாறப் பட்டது. விருந்து என்ருல் பெரிய படையல். நெய் ஊற்றிக்கொண்டு வரும்போது, சமையல்காரன் அருகாக வந்ததும் நெய் இல்லை. ''உள்ளே போய் உனக்கும் என் பிள்ளைக்கும் நெய் கொண்டுவருகிறேன்'' என்று போனுள்.

கொண்டுவந்ததை, சந்நியாசி இலையில் நிறைய ஊற்றினுள். இதைச் சமையல்காரன் பார்த்துக் கொண் டிருந்தான். அவன் இலைக்கு வந்தபோது, இரண்டு கரண்டிதான் ஊற்றினுள். சமையல் காரனுக்கு, 'பெற்ற பிள்ளை என்ருல் உயர்வுதான். நாம் தாழ்வு' என்ற எண்ணம் மனத்தில் பிறந்தது.

சற்று நேரத்தில் எல்லோரும் சாதம் உண்டார்கள். தன் அருகாக அமர்ந்த சந்நியாசியும் உண்ணுகிருர். சமையல்காரனுக்கு வாந்தி வந்தது. பந்தியில் எவ்வாறு மரியாதைக் குறைவாக நடப்பது என்று அடக்கிக்கொண்டான். ஒரு கவளம் கூட உண்ண முடியவில்லை.

சந்நியாசியும், சாதம் உண்ணுகிருர். துளிகூடக் கசப்பைக் காட்டிக் கொள்ளாமல் உண்ணுகிருர்.

பந்தியிலிருந்த எல்லோரும் உண்டார்கள்.

சமையல்காரன் மட்டும் உண்பது போல் பாசாங்கு செய்தான்.

''ஏனம்மா, மறந்துபோய் சமையல் கட்டிலே உள்ள வேப்பெண்ணெயைக் கொண்டுவந்துவிட்டீர்களா?'' என்று கேட்டும்விட்டான்.

''வேப்பெண்ணெயா? என் பிள்ளை உண்கிருனே? உனக்கும் அவனுக்கும் ஒரே பாத்திரத்திலிருந்துதான் நெய் ஊற்றினேன்.''

சந்நியாசியும், ''ஆமாம் அம்மா, வேப்பெண்ணெய்தான்'' என்று சொன்னுர். ஆனுலும் இலையில் ஒரு பருக்கை இல்லை. உண்ட பின்னர் சொல்லுகிருர் அவர்.

''வேப்பெண்ணெய் என்று தெரிந்துமா நீ உண்டாய்?''

''இல்லையம்மா, நான் கடவுளின் தத்துவங்களைப்பற்றி எண்ணமிட்டுக்கொண் டிருந்தேன். உண்பது என்னவென்று தெரியவில்லை. அதிலும் இன்றைக்குச் சமையல்காரன் இவன் ஒரு சில சுலோகங்களில் தவறுதலாகச் சொன்னுன். அதை நினைவுபடுத்திக் கொண்டிருந்தேன்.''

சமையல்காரன் அயர்ந்துபோய் உட்கார்ந்தான். விருந்தினர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.

''அம்மா, அவர் அதிக நேரம் பூஜை செய்வதற்கும், சில சமயம் உடனடியாக முடித்துவிடுவதற்கும், காரணம் கண்டுபிடித்து விட்டேன்.''

''என்ன காரணம்?''

''என் போன்றவர்கள், பூஜை நேரத்தில் மட்டும் கடவுளை எண்ணுகிறோம். அவரோ நாள் முழுவதும் கடவுள் சிந்தனையில் இருக்கிறார். அதனால்தான் நெய்க்கும் வேப்பெண்ணெய்க்கும் வித்தியாசம் தெரியாமல் பகவானைப்பற்றிய நினைவில் வேப்பெண்ணெய்யைச் சாப்பிட்டிருக்கிறார்'' என்று நாத் தழுதழுக்கச் சொன்னான்.

''அதுமட்டுமல்ல. பூஜை என்பது மனம் முழுவதும் ஆட்சி செய்து முழுமனத்துடன் ஈடுபட வேண்டும். அப்போது, அதற்குக் காலத்தின் கணக்குக் கிடையாது. உண்ணும்போதும் உறங்கும் போதும் சந்நியாசியின் நினைவு கடவுள் பற்றியது. நீயோ கடவுளுக்கு பூஜை செய்யும்போதுதான் நினைக்கிறாய்'' என்று சொன்னபோது சமையல்காரனுக்கு மனம் சுருக்கென்றது.

மந்திரங்கள், சுலோகங்கள் சொன்னதால் மட்டும் பக்தன் ஆகிவிட முடியாது என்று முடிவு கட்டினான்.

''இனி நான் அவர் பூஜையைக் குறை சொல்ல மாட்டேன்.''

''சந்நியாசியின் உள்ளத்தை உன் போன்றவர்கள் அறிவது கடினம். உனக்குப் பாடம் சொல்லவேண்டுமென்ற காரணத்திற்காக உனக்கு வேப்பெண்ணெய் ஊற்றியது என்னுடைய பெரிய தவறு. அதற்கு நீ என்னை மன்னிக்கவேண்டும். என் தவறு பெரிது'' என்று கண்ணீர் வடித்தாள் அந்த அம்மையார்.

சமையல்காரன் அந்த அம்மாள் காலில் விழுந்து, ''அம்மா, நீங்கள் உங்கள் பிள்ளைக்குச் சமமாக மதித்து ஊற்றினீர்கள். இந்த வேலைக்காரனையும் உங்கள் மகனைப்போலவே இன்றுமுதல் நடத்தவேண்டும், அம்மா, நீங்கள் இனிமேல் என் அம்மா'' என்று கதறினான்.

''மகனே, எழுந்திரு'' என்று சொன்னாள்.

இது, எதுவும் அறியாத சந்நியாசி நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

தேன் ஜாடிகள்: விடை

மொத்தம் இருபத்தொரு ஜாடிகள். ஆகையால் சமமாகக் கொடுத்தால் ஒவ்வொருவருக்கும் ஏழு ஜாடிகள் வீதம் கிடைக்கவேண்டும். மொத்தத் தேன் அளவு $10\frac{1}{2}$ ஜாடிகள். ஆகையால் ஒவ்வொருவருக்கும் $3\frac{1}{2}$ ஜாடி அளவு தேன் கிடைக்கவேண்டும். இதைக் கீழே கண்டவாறு பிரித்துக்கொள்ள வேண்டும்.

இதற்கு இரண்டு விடைகள் உண்டு :

		நிறைந்தது	பாதி	காலி
1.	மூத்தவன்	3	1	3
	இரண்டாவது மகன்	3	1	3
	மூன்றுவது மகன்	1	5	1
2.	மூத்தவன்	3	1	3
	இரண்டாவது மகன்	2	3	2
	மூன்றுவது மகன்	2	3	2

அது முதல் புலிக்குட்டி அடிக்கடி சாமியாரைப் பார்க்க வருவான். சாமியார் அவனுக்கு ராமாயணம் மகாபாரதம் முதலிய கதைகளைச் சொல்வார். புலிக்குட்டி சிறந்த வீரனாக விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். வெகு சீக்கிரத்தில் அவர் உபதேசங்களால் புலிக்குட்டி வீரம், தீரம், பரோபகாரம் முதலிய நற்குணங்கள் பெற்று விளங்கினான்.

ஒரு நாள் அவன் சாமியாரைப் பார்க்க வரும் போது. . . .

ஆனால் இவர்கள் சோழ
வீரர்களாகத் தெரியவில்
லையே! முகமூடி யணிந்த கொள்
ளைக் கூட்டத்தினராக் ஒரு
வேளை இருக்குமோ?

அடுத்த கணம்..............

(தொடரும்)

கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர்கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம்.

நிபந்தனைகள்:—

(1) சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுதவேண்டும்.

(3) கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

(4) தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

(5) குழந்தைகள்-குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

(6) முடிவுத் தேதி 31—8—'56.

மற்ற விவரங்களை, 15—7—'56 'குழந்தைகளே!' பகுதியில் காணலாம்.

— ஆசிரியர்.

பேனா நண்பர்கள்

1. N. பஞ்சரத்னம், 18- B, வன்னியர் தெரு, சூளைமேடு, கோடம்பாக்கம், சென்னை-24
2. N. கிருஷ்ணமூர்த்தி, 18-C வன்னியர் தெரு, சூளைமேடு, கோடம்பாக்கம், சென்னை-24.
3. C. பழனிவேலு, 14, ஆவாரங்காட்டுத்தெரு, திருவண்ணாமலை (வ. ஆ.)
4. D. சிவராமன், காந்தி நிலயம், ஜூபிலி ரோடு, இளஞ்சி, தென்காசி வழி.
5. A. K. இப்ராகிம், மூன்றும் படிவம்-B, போர்டு உயர்நிலைப் பள்ளி, அறந்தாங்கி, தஞ்சை ஜில்லா.
6. P. சையது அப்தாஹீர், தாத்தப்பன் குளம் (கோணிக் கிராமம்) புதுப்பள்ளி வாசல் தெரு, கம்பம், மதுரை ஜில்லா.

(Regd, as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

கண்ணன் வெளியீடுகள்

லீடர் மணி - ஆர்வி 1 8 0

இளைய தாயாரின் கொடுமைகளுக்கிடையே கிராமத்தில் பள்ளிப் படிப்பை முடிக்கிறான் மணி. மேலே படிக்கப் பக்கத்து நகரத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் செல்கிறான். அங்கேயும் அவர்கள் கொடுமை தாங்காமல் நடு இரவில் வெளியேறி விடுகிறான். வழியில் நண்பனாக வரும் கங்கன் ஆசை காட்டி அவனைச் சென்னைக்கு அழைத்துச் சென்று நடுத்தெருவில் விட்டுச் செல்கிறான். பலவித இன்னல்களையும் சமாளித்த வாறே விடாமுயற்சியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறு கிறான். லீடர் பட்டம் பெற்ற அவனை விமான நிலையத்தில் வரவேற்கிறார்கள். படிக்கப் படிக்கத் தெவிட்டாத கதை. சுவையான சம்பவங்கள். சிறுவர் ஒவ்வொருவரும் படித்து அநுபவிக்க வேண்டிய ரஸமான நாவல்.

அசட்டுப் பிச்சு - 'ஆர்வி' 1 0 0

ஏ. பி. என்ற பையனை ஊரில் உள்ள மற்ற நண்பர்கள் அசட்டுப் பிச்சுவாக்கி விடுகிறார்கள். அவன் நடையும் உடையும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அவன் அதிருஷ்டமோ அளவிட முடியாமல் இருக்கிறது. பெரிய பெரிய திருட்டுக்களையெல்லாம் அநாயாசமாகக் கண்டு பிடித்து விடுகிறான் அவன். பெயரும் புகழும் அவனைத் தேடி வருகின்றன. அடுக்கடுக்கான சம்பவங்களும் அழகான சம் பாஷணைகளும் நிறைந்த அருமையான கதை.

அபாயச் சங்கு - நீலம் 0 8 0

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பி னால் அடங்கிவிடுவான் என்று நினைக்கிறார்கள். ஆனால் புறப் பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் காட்டு கிறான் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கிறான். அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது. சுவாரஸ்யமும் விறுவிறுப்பும் நிறைந்த கதை.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.